# HARTI

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# ANNUAL REPORT

# 2021



**හෙක්ටර් කොබ්බෑකඩුව ගොවි කටයුතු පර්යේෂණ හා පුහුණු කිරීමේ ආයතනය**

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**Hector Kobbekaduwa Agrarian Research and Training Institute**

# HARTI

# ஆண்டு அறிக்கை 2021

**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

| | | பக்கம் |
|---|---|---|
| 01. | எம்மைப் பற்றி, தூரநோக்கு மற்றும் செயற்பணி | iii |
| 02. | ஆளுனர் சபை | iv |
| 03. | கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு | vii |
| 04. | ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு | viii |
| 05. | சிறப்பு நிகழ்வுகள் | xi |
| 06. | தலைவரின் செய்தி | xix |
| 07. | பணிப்பாளரின் செய்தி | xx |
| 08. | நிறுவனக் கட்டமைப்பு | xxiii |
| 09. | சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் | xxiv |
| 10. | செயல்திறன் குறிகாட்டிகள் | xxv |
| 11. | ஆராய்ச்சி | 2 |
| | 11.1 கிராமிய முன்னேற்றம் | 4 |
| | 11.2 சூழல் | 17 |
| | 11.3 உணவு முறைமைகள் | 24 |
| 12. | பயிற்சி திட்டங்கள் | 51 |
| 13. | தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு | 55 |
| 14 | வெளிப்புறக் கூட்டாண்மைகள் | 56 |
| | 14.1 ஆராய்ச்சிக் கூட்டாண்மைகள் | 59 |
| | 14.2 பயிற்சி கூட்டாண்மைகள் | 60 |
| | 14.3 புரிந்துணர்வு ஒப்பந்தம் | 60 |
| .15 | பணியாளர் பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு | |
| | 15.1 31 டிசம்பர் 2021இல் ஊழியர்கோப்பின் நிலை | 61 |
| | 15.2 பணியாளர்களின் பயிற்சி | 62 |
| 16. | நிலைத்திருத்தல் முன்னேற்ற குறிக்கோள்களை ச் சாதிப்பதற்கான செயல்திறன் (SDG) | 63 |
| 17. | முன்னோக்கி செல்லும் வழி | 69 |
| 17.1 | ஆராய்ச்சி பிரிவுகளின் மறுசீரமைப்பு | 69 |
| 17.2 | ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர்கள் | 70 |
| 18. | இறுதிக் கணக்குகள் | 71 |
| 19 | 2018இன் தேசிய சட்டத்தின் 19ஆம் இலக்கத்தின் பிரிவு 12இன் படி கணக்காய்வு அறிக்கை | 93 |
| 20 | பதில் - 2018இன் தேசிய சட்டத்தின் 19ஆம் இலக்கத்தின் பிரிவு 12 | 98 |



## எம்மைப்

1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நியதிச்சட்ட அமைப்பாகும்.

கொள்கை சார்ந்த ஆராய்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் விவசாய மற்றும் கிராமப்புறத் துறையின் பயிற்சித் தேவைகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை நிறுவகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

நாட்டில் விவசாய ஆராய்ச்சி துறையில் ஒரு முன்னோடியாக, நிறுவகம் அதன் தொடக்கத்தில் இருந்து அதன் பயனுரித்தாளர்களுக்கு சேவை செய்து வருகிறது. இது சமூகப் பொருளாதார ஆராய்ச்சியையும், மற்றும் பயிற்சியையும் நடத்துவதன் மூலமும் அத்துடன் விவசாயத் துறைக்கான முன்னேற்றக் கொள்கைகளை உருவாக்குவதற்கான தகவல்களை வழங்குவதன் மூலமும் திரட்டப்பட்ட பரந்த அளவிலான அனுபவத்துடன் ஆயுதபாணியாகவுள்ளது.

## தூரநோக்கு

நிலையான கமநலத்திற்கும் கிராமிய அபிவிருத்திற்குமான அறிவு , உருவாக்கத்திலும் மற்றும் அறிவு பரம்பலிலும் முதன்னிலை

## செயற்பணி

## ஆளுனர் சபை

சி, பயிற்சிக் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக கமநலத் துறையையும் மற்றும் கிராமியத் துறையையும் வலுப்படுத்துதல்.

| | |
|---|---|
| திரு.சுமேத பெரேரா. WWV RWP RSP USP NDU | - செயலாளர், விவசாய அமைச்சு<br>மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற)<br>தலைவர்<br>(பெப்ரவரி 2021) |
| சிரேஷ்ட பேராசிரியர் உதித் கே. ஜயசிங்க | - செயலாளர், விவசாய அமைச்சு<br>தலைவர் (மார்ச் 2021) |
| சிரேஷ்ட பேராசிரியர் ரஞ்ஜித் பிரேமலால் டீ சில்வா | - பணிப்பாளர்/CEO<br>(2021 ஜனவரி முதல் பெப்ரவரி வரை) |
| திரு.மாலிந்த செனவிரத்ன | - பணிப்பாளர்/ CEO<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| கலாநிதி டபிள்யூ.எம்.டபிள்யூ.வீரகோன் | - உறுப்பினர்<br>விவசாய பணிப்பாளர் நாயகம்<br>விவசாய அமைச்சு<br>(பெப்ரவரி 2021 முதல் ஓகஸ்ட் 2021 வரை) |
| கலாநிதி எஸ்.எச்.ஏ.டி சில்வா | - உறுப்பினர்<br>பணிப்பாளர் நாயகம்<br>விவசாய அமைச்சு<br>(செப்ரெம்பர் 2021 முதல்) |
| திரு.ஜி.டி.கீர்த்தி கமகே | - உறுப்பினர்<br>காணி ஆணையாளர் நாயகம்<br>காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| திரு. டபிள்யூ.எம்.எம்.பி.வீரசேகர | - உறுப்பினர்<br>ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தி திணைக்களம்<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| திரு. ஏ.எச்.எம்.எல்.அபேரத்ன | - உறுப்பினர்<br>ஆணையாளர் நாயகம்<br>கமநல அபிவிருத்தி திணைக்களம்<br>(மார்ச் 2021 முதல்) |

| | |
|---|---|
| திரு. (பொறியாளர்) நிஹால் சிறிவர்தன | - உறுப்பினர்<br>பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசனத் திணைக்களம்<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| திரு.சுவிந்தா எஸ்.சிங்கப்புலி | - உறுப்பினர்<br>ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்<br>பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்<br>கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (அக்டோபர் 2021 முதல்) |
| திருமதி ஜி.என். லியனாராச்சி | - உறுப்பினர்<br>ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்<br>பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்<br>கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (நவம்பர் 2021 முதல்) |
| கலாநிதி டி.பி.டி.விஜேரத்ன | - உறுப்பினர்<br>உதவி FAO பிரதிநிதி (திட்டங்கள்)<br>உணவு மற்றும் விவசாய அமைப்பு<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| திருமதி பி. மாலதி | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர்<br>(விவசாய தொழில்நுட்பம்)<br>ராஜாங்க விவசாய அமைச்சு<br>(மார்ச் 2021 முதல்) |
| திரு. கே.பி. கரவிட்ட | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர்<br>(விவசாய முன்னேற்றம் -01)<br>ராஜாங்க விவசாய அமைச்சு<br>(செப்ரெம்பர் 2021 முதல்) |
| திருமதி புபுதிகா எஸ்.பண்டார | - உறுப்பினர்<br>சிரேஷ்ட துணைச் செயலாளர்<br>(நிர்வாகம்)<br>காணி அமைச்சு (ஆகஸ்ட் 2021 முதல்) |
| திருமதி ஆர்.பி.ஆர்.ரணசிங்க | - உறுப்பினர் |

| | |
|---|---|
| | பணிப்பாளர் (காணி கையகப்படுத்தல்)<br>காணி அமைச்சு<br>(ஓகஸ்ட் 2021 முதல்) |
| திருமதி ஆர்.ஏ.டி.ஆர்.ரணசிங்க | - உறுப்பினர்<br>பணிப்பாளர் (பதில்)<br>நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை முன்னேற்ற அமைச்சு<br>(பெப்ரவரி 2021 முதல்) |
| திருமதி அருணி எஸ்.ரணசிங்க | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்)<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு (பெப்ரவரி 2021 முதல்) |
| திருமதி பி.எல், டி. பாலசூரிய | - உறுப்பினர்<br>கல்வி பணிப்பாளர்<br>(விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல்)<br>கல்வி அமைச்சு (பெப்ரவரி 2021 முதல்) |
| திருமதி ஆர்.எம், சி.எம். ஹேரத் | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர்<br>(காணிகள் மற்றும் சட்டம்)<br>நீர்ப்பாசன அமைச்சு (மார்ச் 2021 முதல்) |
| செல்வி கில்மா தஹநாயக்க | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர்<br>வர்த்தக அமைச்சு (பெப்ரவரி 2021 முதல்) |
| கலாநிதி சந்திரநாத் அமரசேகர | - உறுப்பினர்<br>மேலதிகச் செயலாளர்,<br>பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்<br>இலங்கை மத்திய வங்கி (பெப்ரவரி 2021 முதல் ஒக்டோபர் 2021 வரை) |
| பேராசிரியர் டி,கே,என்,ஜி புஷ்பகுமார | - உறுப்பினர்<br>பீடாதிபதி , விவசாய பீடம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்<br>(பெப்ரவரி 2021 முதல் நவம்பர் 2021 வரை) |

## ஆளுநர் சபையின் கூட்டங்கள் -

| சந்திப்பின் திகதி | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. 08 பெப்ரவரி, 2021 | 14 |
| 2. 30 மார்ச், 2021 | 17 |
| 3. 03 ஓகஸ்ட், 2021 | 18 |
| 4. 14 செப்ரெம்பர், 2021 | 19 |
| 5. 12 ஒக்டோபர், 2021 | 18 |
| 6. 30 நவம்பர் 2021 | 18 |

## கணக்காய்வு மற்றும்

**கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| செல்வி ஆர்.ஏ.டி.ஆர்.ரணசிங்க (தலைவர்) | - | பணிப்பாளர் (பதில்)<br>நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கை முன்னேற்ற அமைச்சு |
| செல்வி கில்மா தஹநாயக்க (உறுப்பினர்) | - | உதவிச் செயலாளர், வர்த்தக அமைச்சு |
| அருணி எஸ். ரணசிங்க (உறுப்பினர்) | - | உதவிச் செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு |
| செல்வி எஸ். ஏ.டி.என். பெரேரா (பார்வையாளர்) | - | கணக்காய்வாளர்<br>நாயகம் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் |
| திரு. யு.எஸ்.எல். குமார (பார்வையாளர்) | - | தலைமை உள்ளக கணக்காய்வாளர், விவசாய அமைச்சு |
| திரு.ஈ.டபிள்யூ.ஜி.கே.பிரியதர்ஷன (பார்வையாளர்) | - | தலைமை உள்ளகக் கணக்காய்வாளர், விவசாய அமைச்சு<br>(ஓகஸ்ட் 2021 முதல்) |

## கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின்

| | |
|---|---|
| நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | 05 |
| கூட்டங்களின் திகதி | 22 பெப்ரவரி 2021<br>25 பெப்ரவரி 2021<br>13 ஓகஸ்ட் 2021<br>29 அக்டோபர் 2021<br>16 டிசம்பர் 2021 |

## ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தால் நடத்தப்படும் ஆராய்ச்சியையும் மற்றும் பயிற்சியையும் ஒழுங்குபடுத்துவதில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. நிறுவனரீதியிலான நூற்கல்வி நடவடிக்கைகளின் வடிவத்தை நிர்ணயிப்பதில் பல்வேறு ஆதரவை நூற்கல்வியாளர்களைக் கொண்ட குழு வழங்குகிறது.

நிறுவகத்தின் ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் ஆகியன தொடர்பான ஆற்றல் முன்னேற்றத்திற்கும் மற்றும் மேம்பாட்டிற்குமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் தொடர்புடைய உறுப்பினர்களின் அவதானிப்புகளைப் பெறுவதற்கு நாங்கள் உரிமை பெற்றுள்ளோம். விசேஷமாக, எங்கள் நிறுவகத்தால் உருவாக்கப்பட்ட அனைத்து ஆராய்ச்சி முன்மொழிவுகளும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவால் நியமிக்கப்பட்ட முன்மொழிவுக்கு தொடர்புடைய துறையில் நிபுணத்துவம் பெற்ற உறுப்பினர்களால் ஆராயப்படுகின்றன.

1. நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் திட்டமிட வழிகாட்டுதல்கள், உள்ளீடுகள் மற்றும் நிபுணத்துவ அறிவு ஆகியவற்றை வழங்குதல்.
2. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த செயற்திட்டத்தின் கீழ் ஆய்வுகள் மூலம் முன்வைக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளை ஆராய்ந்து, ஒப்புதல் அளித்தல்.
3. நடந்துகொண்டிருக்கும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களினதும் மற்றும் பயிற்சித் திட்டங்களினதும் முன்னேற்றத்தைக் கவனித்தல்.
4. வரைவு ஆய்வு அறிக்கைகளை ஆய்வு செய்தல், நுண்ணாய்தல் மற்றும் முன்மொழிவுகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் வெளியிடுவதற்கு முன் ஆராய்ச்சி அறிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல்.
5. நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு மற்றும் மதிப்பீடு.

| தொ/ இல. | பெயர் | பதவி/நிறுவனம் |
|---|---|---|
| 01. | பேராசிரியர் வண. விஜிதபுர விமலார்த்தன தேரர் | சிரேஷ்ட பேராசிரியர்<br>பொருளாதாரத் துறை<br>கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 02. | பேராசிரியர் எல்.எம்.அபேவிக்ரம | சிரேஷ்ட பேராசிரியர்<br>விவசாயப் பொருளாதாரம் மற்றும் கருத்திட்டங்கள் துறை<br>விவசாய பீடம், ருகுணு பல்கலைக்கழகம். |
| 03. | திரு.எம்.எம்.எம். அஹியார் | ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br>சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் |

| | | |
|---|---|---|
| **04** | பேராசிரியர்<br>டி.பி.எஸ்.சந்திரகுமார | சிரேஷ்ட பேராசிரியர்<br>பொருளாதாரத் துறை,<br>மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| **05** | பேராசிரியர்<br>என்.டி.கே.தயாவன்ஸ | பேராசிரியர்<br>விவசாயப் பொறியியல் துறை<br>விவசாயப் பீடம், பேராதனை பல்கலைக்கழகம் |
| **06.** | கலாநிதி பி.பீ.தர்மசேன | தலைமை விஞ்ஞானி<br>சர்வதேச ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நிலையம் |
| **07.** | திலீபா எம்.எடங்கமகே | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முடிவு விஞ்ஞானங்கள் துறை<br>முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| **08.** | கலாநிதி<br>ஏ.பி.எஸ்.பெர்னாண்டோ | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய முறைமைகள் துறை<br>விவசாய பீடம்<br>ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| **09.** | கலாநிதி பிராங்க் நிரஞ்சன் | உசாவலர்<br>முன்னாள் மேலதிகப் பணிப்பாளர்<br>இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபை |
| **10** | கலாநிதி பிரெட்ரிக் அபேரத்ன | உசாவலர்<br>முன்னாள் விவசாயப் பொருளாதார நிபுணர்<br>ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் |
| **11.** | பேராசிரியர் எம்.எம். குணதிலக | உசாவலர்<br>முன்னாள் பணிப்பாளர்<br>(சூழல் மற்றும் பாதுகாப்பு)<br>ஆசிய அபிவிருத்தி வங்கி |
| **12.** | பேராசிரியர்<br>ஈ.ஆர்.என்.குணவர்தன | சிரேஷ்ட பேராசிரியர்<br>விவசாய பொறியியல் துறை<br>விவசாய பீடம்<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| **13.** | பேராசிரியர் கெமிந்த ஹேரத் | பேராசிரியர்<br>விவசாய-வணிக முகாமைத்துவத் துறை<br>விவசாயம் மற்றும்பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம்<br>வயம்ப பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| **14.** | கலாநிதி பி.எச்.ஏ.பி.சி. கிராஹகம | சிரேஷ்ட விஞ்ஞானி<br>இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபை |
| **15.** | பேராசிரியர் மஞ்சுள பி.சுமித் மாகமகே | பேராசிரியர்<br>கால்நடை உற்பத்தி துறை<br>விவசாய பீடம்<br>சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| **16.** | பொறி. டி.டி.பிரபாத் விதாரண | உசாவலர்<br>முன்னாள் துறைத் தலைவர்<br>நீர் முகாமைத்துவப் பிரிவு<br>விவசாய முன்னேற்றத் திணைக்களம் |
| **17.** | பேராசிரியர் டி.வி.பி.பிரசாத் | பேராசிரியர்<br>விவசாய பொருளாதாரம் மற்றும் வணிக முகாமைத்துவ துறை, விவசாய பீடம்<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| **18.** | பேராசிரியர் பிரசாந்தி குணவர்தன | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>வனவியல் மற்றும் சூழல் விஞ்ஞானத் துறை<br>பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| **19.** | பேராசிரியர் பிரியங்கா துனுசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>பொருளாதாரத் துறை<br>கலைப் பீடம்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| **20.** | கலாநிதி எல்.பி.ரூபசேன | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய முறைமைகள் துறை<br>விவசாய பீடம்<br>ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| **21.** | பேராசிரியர் கே.சூரியகுமார | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாய பொருளியல் துறை<br>விவசாய பீடம்<br>யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் |
| **22.** | பேராசிரியர் எம்.சமாத் | உசாவலர்<br>தெற்காசிய அலுவலகத்தின் முன்னாள் தலைவர்<br>சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் |
| **23.** | பேராசிரியர் எம்.எம்.சமன் கே.ஹேரத் | பேராசிரியர்<br>பீடாதிபதி<br>விலங்கியல் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம்<br>ஊவா - வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் |
| **24.** | கலாநிதி சாந்த விஜேசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர் |

| | | |
|---|---|---|
| | | புவியியல் துறை<br>மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| **25.** | கலாநிதி திவஹரி கெரேதரன் | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>விவசாயப் பொருளியல் துறை<br>விவசாய பீடம்<br>கிழக்கு பல்கலைக்கழகம் |
| **26.** | பேராசிரியர் ரியூடர் சில்வா | முன்னாள் பேராசிரியர்<br>சமூக விஞ்ஞானங்கள் துறை<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| **27.** | கலாநிதி டி.பி.ரி. விஜேரத்ன | உதவிப் பிரதிநிதி (ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு) |

## சிறப்பு நிகழ்வுகள் -



ஜனவரி 2021 - சந்தைப்படுத்தல் தகவல் கருத்திட்டத்தின் ஆரம்பம்



பெப்ரவரி 2021 - பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியில் கடமைகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் திரு. மாலிந்த செனவிரத்ன பொறுப்பேற்றார்




மார்ச் 2021 - "கொவி ஜனதா " சஞ்சிகையின்
ஜனவரி - மார்ச் இதழின் வெளியீடு



ஏப்ரல் 2021 - புத்தாண்டு கொண்டாட்டங்களுடன் உடன் இணைந்து
பணியாளர்களின் பங்கேற்புடன் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது



உணவு மற்றும் விவசாய-வணிகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு
பயிற்சித் திட்டம்.

**"விவசாய-வணிக முகாமைத்துவத்தில் சந்தைப்படுத்தல் தகவலின் பயன்பாடு" என்ற கருப்பொருளின் கீழ், பதுளையில் நடைபெற்றது.**




**மே 2021 - தேசிய விவசாயக் கொள்கை தொடர்பான சிறப்பு ஆய்வு அறிக்கை விவசாய அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது**



**ஜூன் 2021 - பல்வேறு துறைகளைச் சேர்ந்த பயனுரித்தாளர்களின் பங்கேற்புடன், “இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாய மரபுரிமை முறைமைகள்” பற்றிய ஆய்வில், Zoom பற்றிய ஓர் அறிவுசார் கலந்துரையாடல் நடைபெற்றது**




**ஜூலை  2021 - கௌரவ நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் முன்னேற்ற தொழில்நுட்ப விவசாய அமைச்சர் திரு . ஷீந்திர ராஜபக்ஷ ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களைச் சந்தித்தார் .**



**ஒகஸ்ட்  - 2021ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட வன விலங்குகளால் உணவுப் பயிர்களுக்கு “ பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்“ மற்றும் ”ஏற்படும் சேதம்பாவனைஆகி ”ய இரண்டு அறிக்கைகளை கௌரவ சூழல் அமைச்சர் திருமஹிந்த அமரவீர  . மற்றும் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்க ஆகியோரிடம் சமர்ப்பித்தல்.**

.




**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் நிறுவனர் காலஞ்சென்ற திரு ஹெக்டர் . கொப்பேகடுவவின் 38ஆவது நினைவேந்தல்.**



செப்டம்பர் 2021 - விவசாய அமைச்சின் மேற்பார்வையின் கீழ் HARTI நிறுவனம் கையளிக்கப்பட்டதன் பின்னர் கௌரவ விவசாய அமைச்சர் திரு . மஹிந்தானந்த அலுத்கமகேபணியாளர்களைச் சந்தித்தார்.



ஒக்டோபர் 2021 - ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (HARTI) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆகியவற்றின் கூட்டுமுயற்சியின் மீதான அடிப்படையில், “இலங்கையில் அனுராதபுர மாவட்டத்தில் அரிசி உற்பத்தியில் மேம்படுத்தப்பட்ட கருத்திட்டச் சேவைகளின் தாக்கம் குறித்த ஆதாரங்களை அமைத்தல்” மீதான ஒரு கலந்துரையாடல்.




**நவம்பர் 2021 - விவசாய-வணிகம் மற்றும் சந்தை விரிவாக்கம் பற்றிய கருத்துருவின் பிரயோகம் மீதான செயலமர்வு.**




**"இலங்கையின் வறண்ட வலயத்திலுள்ள பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் காலநிலை மாற்றியமைக்கப்பட்ட விவசாய நடைமுறைகள் மற்றும் காலநிலை தழுவல் பற்றிய ஆய்விற்காக" வேர்ல்ட் விஷன் லங்காவினால் (World Vision Lanka) வழங்கப்பட்ட ரூ. 11 மில்லியன் தொகையிலான ஆராய்ச்சி நிதியமொன்று கிடைத்தது.**


ගොවිමිණ
කෘෂිකර්ම ජාතික පුවත්පත

රට කිරිවලින් ස්වයංපෝෂිත කිරීමට කිරි ගවයින් 4200ක් ආනයනයට කැබිනට් අනුමැතිය »2 පිටුවට

ජාතික ආර්ථිකය නගාසිටුවීමට නව නිෂ්පාදන ගම්මාන 500ක් »2 පිටුවට

අස්වනු හානියට වනඅලි දායකත්වය 06%ක්

46%ක් පමණ වන වැඩිම අස්වනු හානිය වල් ඌරන් - රිලවුන් වැනි සතුන්ගෙන්

කුරුල්ලන්ගේ දායකත්වය 34%ක්

Harti නව පර්යේෂණ වාර්තාවකින්
කෘෂිකර්මාන්තයේ වනසත්ත්ව හානි ගැන ආන්දෝලනාත්මක හෙළිදරව්වක් »2 පිටුවට

මහ කන්නයට 'පැරශූට් තැටි' අඩු මිලට දෙන්න නිෂ්පාදකයින් සමග සාකච්ඡා »2 පිටුවට

ප්ලාස්ටික් අපද්‍රව්‍ය කළමණාකරණය සඳහා දස අවුරුදු ජාතික ක්‍රියාකාරී සැලැස්මක් »2 පිටුවට

දේශීය ලොකු ලූනු ගොවීන්ගේ අතමිට සරු වෙයි

මහ කන්නයේ වගා කරන්න දින 35ක් ගොවීන්ට ජලය »2 පිටුවට

අල, මිරිස් සහ ලූණුවලින් රට ස්වයංපෝෂිත කරන වැඩපිළිවෙළ කඩිනම් කරන්න – කෘෂිකර්ම ඇමතිගෙන් නියෝග »2 පිටුවට

දියුණුවේ විශ්වාසය
Browns TAFE 5245 DI 4x4
0773 457 987
0773 457 988
Browns Agriculture

**“கொவிமின ” விவசாய செய்தித்தாள் மற்றும் govimina.lk இணையத்தளம் ஆகியனவற்றை ஆரம்பித்தல்**



**விஞ்ஞான மற்றும் நூற்கல்வி ஒத்துழைப்புக்காக HARTI மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைசாத்திடப்படல்**

## தலைவரின்

நாட்டின் விவசாய மற்றும் கமநலத் துறைகளின் மேம்பாட்டிற்காக பாடுபடும் அரசாங்க நிறுவனங்களின் மத்தியில், சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் தரவைச் சேகரிப்பதிலும் மற்றும் தகவல்களைப் பரப்புவதிலும் குறிப்பிடத்தக்க பங்கை ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (HARTI) வகிக்கிறது. விவசாயம் மற்றும் தொடர்புடைய துறைகள் ஆகியன மீது அரசாங்கக் கொள்கைகளை வகுப்பதில் அதன் விஞ்ஞானரீதியிலான வெளியீடுகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

கொவிட் -19 தொற்றுநோயை அடுத்து முன்வைக்கப்பட்ட பல சவால்களுக்கு மத்தியிலும் அதன் பங்கை சரியாகக் கண்டறிந்து ஜனாதிபதியின் பசுமை விவசாயக் கருத்தை யதார்த்தமாக்குவதில் HARTIஇன் பங்களிப்பிற்கு இந்த அறிக்கை சான்றாகும். HARTI ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் இலங்கையில் நிலையான விவசாயத்தின் இலக்கை நிறைவேற்றுவதில் மகத்தான சேவை செய்யும் என்பது தெளிவாகிறது.

இந்த ஆண்டும் அதற்குப் பின்னரும் அதன் பங்கை மேலும் மேம்படுத்துவதன் மூலம் விவசாயத்தின் முன்னேற்றத்திற்கான அதன் ஆதரவை HARTI தொடரும் என்று நான் நம்புகிறேன்.

செயலாளர்
விவசாய அமைச்சு

## பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி



பெரும்பாலும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முழு உலகிற்கும் மிகவும் சவாலானதாக 2021ஆம் ஆண்டு இருக்கலாம். எந்தக் கண்டமும், எந்த நாடும், எந்த சமூகமும் அல்லது குடித்தனமும் கொவிட்-19 தொற்றுநோயால் விதிக்கப்பட்ட மனவதிர்ச்சி மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றில் இருந்து விடுபடவில்லை. ஆயினும்கூட, நீண்ட காலமாக ஹெ.கொ.க.ஆ.ப.நி. க்கு மிகவும் பயனுள்ள ஆண்டுகளில் 2021 ஒன்றாகும் என்பதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சகல தனியார் மற்றும் அரசாங்க நிறுவகங்களைப் போலவே, இரண்டு சந்தர்ப்பங்களில், நான்கு மாதங்கள் கொண்ட மொத்தக் காலமொன்றுக்கும்,பெருமளவு தருணங்களில் பெருமளவு வாரங்களும் முழுவதுமாக மூடப்படுவதற்கு ஹெ.கொ.க.ஆ.ப.நி. தள்ளப்பட்டதுடன், அது ஒரு சொற்ப பணியாளர் துணையுடன் செயல்பட்டது. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது, சாதனைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

ஆண்டு முழுவதும் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட சகல ஆராய்ச்சித் திட்டங்களும் நிறைவடைந்தன. மேலும், ஆராய்ச்சிக் குழுவின் முன்மாதிரியான அர்ப்பணிப்பு மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றினால் 17 அறிக்கைகள், சில 2015ஆம் ஆண்டு வரை பழமையானவை, பூர்த்தி செய்யப்பட்டு, வெளியிடப்பட்டன. இவை அனைத்தும் சந்தை விலைகளின் தினசரி சேகரிப்பு மற்றும் வாராந்த மற்றும் மாதாந்த பகுப்பாய்வுகளின் தொகுப்பிற்கு மேலதிகமாக விளங்குகின்றன. எப்போதும் போலவே, அரசு நிறுவனங்களினாலும் மற்றும் தனிநபர்களாலும் கோரப்பட்ட தரவு, பகுப்பாய்வு மற்றும் மதிப்பாய்வுகள் ஆகியவற்றுக்கான கோரிக்கைகளுக்கு விரிவாகவும் அத்துடன் உடனடியாகவும் நிறுவகம் பதிலளித்தது.

ஆண்டின் தொடக்கத்தில், நிபுணர்கள் கொண்ட சிறப்பு குழுவால் ‘தேசிய விவசாயக் கொள்கை’ வரைவு உருவாக்கப்பட்டது. ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆவணத்தின் விரிவான மதிப்பாய்வை உருவாக்கி, குழு மற்றும் விவசாயத் துறை ஆகியவற்றில் உள்ள முக்கிய கொள்கை வகுப்பாளர்களுடனும் மற்றும் அதிகாரிகளுடனும் பகிர்ந்து கொண்டனர். ஏறக்குறைய சகல பிரிவுகளிலும் பல ஆண்டுகளாக நிறுவகம் தயாரித்த பெருமளவு ஆராய்ச்சி முடிவுகளை வரைவு ஆவணம் எதிரொலித்தது என்பதைக் குறித்துக்கொள்வது மனதிற்கு மகிழ்ச்சயை அளிக்கிறது.

2021ஆம் ஆண்டில் இடத்திற்குரியதும் மற்றும் உடனடியானதுமான அக்கறையுள்ள விடயங்களில் கொள்கை வகுப்பாளர்களுக்குத் தெரிவிக்க மகத்தான முயற்சிகளைச் செலவழித்ததிற்காக நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் ஆதரவுப் பணியாளர்களைப் பாராட்ட வேண்டும். குறிப்பாக, இரசாயன உரத்துக்கு தடை விதிக்கப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, இந்தக் கொள்கை மாற்றத்துடன் தொடர்புடைய சகல தொடர்புடைய காரணிகளின் விரிவான தணிக்கையை நிறுவகம் நடத்தியது. இதன் விளைவாக, இரு முக்கியமான ஆவணங்கள் கிடைத்தன; முதலாவதாக, சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்ட, இந்தக் கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பான 'சிக்கல்கள், சவால்கள் மற்றும் உத்திகள்' மற்றும் இரண்டாவதாக, சேதன உர உற்பத்தி தொடர்பான சாத்தியங்களையும் மற்றும் சவால்களையும் மதிப்பிடுவதற்குத் தேவையான முக்கியமான தலையீடான 'உயிரகத்திரள் விளக்க விவரப்பட்டியல்’. மேலதிகமாக, செயல்படுத்தும்

ஆய்கருவியால் கவனத்திற்கெடுப்பதற்கு அவசிமான பரந்த அளவிலான விடயங்களை உள்ளடக்கிய விவசாய இராஜாங்க அமைச்சரனால் சமர்ப்பிக்கப்பட்ட தொடர்ச்சியான கேள்விகளுக்கு நிறுவகம் விரிவாகப் பதிலளித்தது.

இந்தக் கொள்கை மாற்றத்திற்கு உத்வேகம் அளித்த தொலைநோக்குப் பார்வையை நடைமுறைக்கு கொண்டு வருவதற்காக நிறுவகம் உருவாக்கிய 18 மாத ‘சாலை வரைபடம்’ முக்கியமானதாகும். இது அடிப்படை உண்மை, விவசாயிகளின் மனவுணர்வுகள் மற்றும் நடைமுறைகள், உணவுக் கலாச்சாரங்கள் மற்றும் நுகர்வோர் நடத்தை, கிடைக்கும் தன்மை மற்றும் மாற்று ஊட்டச்சத்துக்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியம் போன்றவற்றைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்ட யதார்த்தமான ஒரு நடைமுறைக்கேற்ற அணுகுமுறையாகும்.

புறஎல்லை வன நிலங்களைப் பயன்படுத்துவது மீதான கொள்கை முடிவைத் தொடர்ந்து, மொனராகலை மாவட்டத்தில் காடழிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஆய்வுக் குழு ஆராய்ச்சியை நடத்தி ஒரு பூர்வாங்க அறிக்கையைத் தயாரித்தது. ஹெ.கொ.க.ஆ.ப.நி. ஆராய்ச்சியாளர்கள் தேசிய சுற்றுச்சூழல் கொள்கை வரைவையும் மதிப்பாய்வு செய்தனர். இந்த ஆவணங்கள் விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட நேரடி அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த ஆண்டில் நிறுவகத்தின் ஆணைப்படுத்தப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக திறமையான மற்றும் தரமான வழிகளில் நிறுவகத்தின் ஆராய்ச்சிக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பல முக்கியமான மற்றும் பல வழிகளில் தீவிர முயற்சிகள் தொடங்கப்பட்டன. ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் கருத்துக்களால் நிரப்பப்பட்ட விரிவான உள் விவாதத்தைத் தொடர்ந்து, ஒரு கூட்டாண்மை மூலோபாயம் உருவாக்கப்பட்டதுடன், அதைத் தொடர்ந்து ஆளுனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. இது ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆய்கருவியின் மறுசீரமைப்பை உள்ளடக்கியுள்ளது. 'தரவு முகாமைத்துவம்' மற்றும் 'தகவல் மற்றும் தகவற்றொடர்பு' என இரண்டு புதிய பிரிவுகள், முதலாவதாக தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு ஆகியன தொடர்பாக ஆராய்ச்சியாளர்களுக்கு சிறந்த ஆதரவை வழங்குவதற்கும், இரண்டாவதாக சகல பங்குதாரர்களிடையே தகவல் மற்றும் அறிவை மிகவும் ஆக்கிரோஷமாக பரப்புவதற்கும் உருவாக்கப்பட்டன.

கொள்கையை உருவாக்கும் கட்டமைப்பிற்குள் பிரவேசிப்பதற்கு நூற்கல்வியாளர்களால் உருவாக்கப்பட்ட வளமானதும், மாறுபட்டதும் மற்றும் விரிவானதுமான அறிவை இயலச்செய்யும் நோக்கமொன்றுடன், விவசாயப் பீடங்களைக் கொண்ட சகல பல்கலைக்கழகங்களுடனும் கலந்துரையாடலை ஹெ.கொ.க.ஆ.ப.நி. தொடங்கியது. கூட்டுப் பணியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்த தொடர்புடைய சகல துணைவேந்தர்களினாலும் மற்றும் பீடாதிபதிகளினாலும் இந்த நடவடிக்கை வரவேற்கப்பட்டு, பாராட்டப்பட்டது. இதன்படி பேராதனை பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், ஊவா-வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. சகல பல்கலைக்கழகங்களும் ஹெ.கொ.க.ஆ.ப.நி. உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஒப்புக்கொண்டன, இதன் மூலம் நெருக்கமாக மேற்பார்வையிடப்பட்ட தொழிற்பயிற்சிகள் மூலம் நிறுவகத்தில் இருந்து பல்கலைக்கழக மாணவர்கள் பயனடையக்கூடிய இயலக்கூடிய சூழலை உருவாக்குகின்ற அதே வேளை, நாடு தழுவிய ஆய்வுகளுக்கும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்காக பரந்த அளவிலான நிபுணர்களை அணிதிரட்டுவதற்கும் நிறுவனத்தின் ஆற்றலளவைக் கணிசமாக மேம்படுத்துகிறது.

கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளால் உருவாக்கப்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும், பரந்த அளவிலான விடயங்களை உள்ளடக்கிய 15க்கும் குறையாத பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டமை இந்த ஆண்டின் மிக முக்கியமான சாதனைகளில் ஒனறாகும்.

விவசாயத்திற்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு செய்தித்தாளின் வரலாற்று வெளியீட்டிற்காக 202ஆம் ஆண்டு நினைவுகூரப்படும். இந்த நிறுவகம், இராஜாங்க அமைச்சின் ஆதரவோடும், விளம்பரங்களை ஆக்ரோஷமாகப் பின்பற்றியதற்கு நன்றியுடனும் ஆண்டின் இறுதியில் ‘கொவிமினா’வைத் தொடங்கியது. பூஜ்ஜிய வருமானத்துடன் 10,000 பிரதிகள் அச்சிடப்பட்ட செய்தித்தாள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக நேரடியாக விவசாய அமைப்புகளுக்கு விநியோகிக்கப்பட்டது. நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையதளம், முகநூல் மற்றும் ட்விட்டர் போன்ற பல சமூக ஊடகத் தளங்கள் மூலம் அறிவைப் பரப்புவதை புதிதாக உருவாக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு உறுதி செய்துள்ளது.

FAO, WFP போன்ற சர்வதேச அமைப்புகளுடனும், வேர்ல்ட் விஷன் போன்ற சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் உறவுகளை மீண்டும் கட்டியெழுப்ப இந்த ஆண்டில் அதிகளவு முயற்சி செலவிடப்பட்டது. ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் அளவீடுகள் ஆகியனவற்றை மேற்கொள்வதற்கு நிறுவகம் நியமிக்கப்பட்டதன் மூலம் இந்த முயற்சிகள் உடனடியான முடிவுகளை அளித்தன. மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில் தொடங்கப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்கு நன்றியுடன், இதே போன்ற நிறுவனங்களுடனான கூட்டாண்மை மூலம் நிறுவகம் தனது பணியின் விரிவெல்லையை மேலும் மேம்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

நிறுவகத்தை மறுதொடக்கம் செய்வதற்கு, அதாவது, அரை நூற்றாண்டுக்கு முன்பு நிர்ணயித்த உயர்ந்த இலக்குகளை அடைய விரும்பும் வலுவான அடித்தளத்தில் அதை வைப்பதற்கும் முயற்சிகளை வழங்கிய நிறுவகத்தை அரை நூற்றாண்டுக்கு முன்பு நிர்ணயித்த உயர்ந்த இலக்குகளை அடைய விரும்பும் வலுவான அடித்தளத்தில் அதை அமைத்த சகல பணியாளர் வகுதிகளிலும் உள்ள முழு ஹெ.கொ.க.ஆ.ப.நி. குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருத்துருவாக்கம் முதல் அறிக்கைகள் தயாரிப்பது வரையிலான ஆராய்ச்சி செயல்முறையை மேற்பார்வையிடுகின்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவானது, எங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளது. நிறுவகத்திற்கு இணங்குவதற்கான மிக உயர்ந்த தரங்களைக் கடைப்பிடிக்க உதவிய ஆளுநர் சபை வழங்கிய ஆதரவையும் மற்றும் வழிகாட்டுதலையும் நான் பாராட்டுகிறேன்.

இறுதியாக, இனிவரும் ஆண்டுகளில் நிறுவகத்தின் வரலாற்றில் 2021ஆம் ஆண்டு ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். எதிர்காலம், சகல சவால்கள் இருந்த போதிலும், ஆராய்ச்சி மற்றும் ஆதரவுப் பணியாளர்களால் எடுத்துக் காட்டப்பட்ட சிறப்பிற்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் மீள்-முனைப்பாக்க செயல்முறை ஆகியன காரணமாக பிரகாசமாக இருப்பதாக நான் நம்புகிறேன்.

மாலிந்த செனவிரத்ன
பணிப்பாளர் / CEO

# ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சிபயிற்சி நிறுவகம் நிறுவனக் கட்டமைப்பு



## சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால சாதனைகள

### நிறுவன வெளியீடுகளின் டிஜிட்டல்மயமாக்கல்

அறிவார்ந்த இலக்கியங்களை டிஜிட்டல்மயமாக்குவதையும், நிறுவன களஞ்சியங்களை அமைப்பதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய டிஜிட்டல்மயமாக்கல் திட்டத்தின் கீழ், HARTIஇன் விஞ்ஞானரீ தியிலான வெளியீடுகள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன.

பயனர்கள் HARTI வெளியீடுகளை http://nsf.ac.lkஇல் அணுகலாம். இந்தக் கருத்திட்டமானது, ஆவணங்களுக்கான ஒன்லைன் அணுகலை எளிதாக்கும் அதே வேளையில், நிறுவகத்தின் அறிவார்ந்த வெளியீடுகளின் மின்னணு களஞ்சியத்தைப் பராமரிக்க ஒரு சிறந்த தளத்தை வழங்கியுள்ளது.

### "கொவிமின" தேசிய விவசாய செய்தித்தாள் மற்றும் govimina.lk இணையத்தளத்தை ஆரம்பித்தல்

விவசாயம் தொடர்பான கொள்கை வளர்ச்சியில் ஒரு முன்னோடி நிறுவனமாக, "கொவிமின" தேசிய விவசாய செய்தித்தாள் தொடங்கப்பட்டது, ஒரு தகவல்தொடர்பாளராகவும் அத்துடன் அறிவைப் பரப்புபவராகவும் அதன் பங்கில் ஒரு புதிய அத்தியாயமாகும். இந்த செய்தித்தாள், பொதுவாக வாசிக்கப்படும், "சாரா" துணையுடன் உள்ளது என்பதுடன், கமநல சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

### சவால்கள்

- கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, ஆண்டு முழுவதும் கள ஆய்வுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தரவுகளைச் சேகரிப்பது ஒரு பெரும் சவாலாக இருந்தது.
- ஒரு தொகையிலான ஆராய்ச்சி அலுவலர் மற்றும் புள்ளிவிபர அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இது ஆராய்ச்சி நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை பெருமளவில் தடை செய்துள்ளது.

### எதிர்கால இலக்குகள்

- இங்கும் மற்றும் வெளிநாடுகளிலும் விவசாயதுதிலும் மற்றும் கமநலத்திலும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஒரு பரந்த மறுசீரமைப்புத் திட்டம் சிந்திக்கப்படுகிறது. ஆரம்ப கட்டமொன்றாக, ஆராய்ச்சிப் பிரிவின் மறுசீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- நிறுவகத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான மேம்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் நடைமுறைகள் மூலம் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் திறமையான சேவைகளை வழங்குதல்.
- விவசாயத் துறையில் உள்ள சவால்களை சமாளிக்க ஒத்துழைப்புடன் செயல்பட அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் உறவுகளையும் மற்றும் கூட்டாண்மைகளையும் பேணுதல். விவசாய ஆராய்ச்சிகளையும் மற்றும் கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் நிறுவனத்துடன் பெரிய அளவிலான கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல்

## செயல்திறன்

### வெளியீடுகள்

| ஆராய்ச்சி | தொழிற்படுபத்திரிகைகள் | அறிக்கைகள் பருகால |
|---|---|---|
| 13 | 03 | 01 |

செய்திமடல் செய்தித்தாள்

தொகுதிகள் 03 02 தொகுதிகள்

### திட்டங்கள்

| ஆராய்ச்சி | ஆராய்ச்சி பயிற்சி | ஒருங்கிணைந்த நிதி (வெளிப்புறம்) நிதி உதவிகள் |
|---|---|---|
| 21 | 02 | 04 |

### கூட்டாண்மைகள்

புரிந்துணர்வு ஒப்பந்தம் 01

### சமூக ஊடகம்

முகநூல் பயனர்களின் எண்ணிக்கை 85% அதிகரித்துள்ளது



**OFCs IN THE INTERMEDIATE SEASON**
**Cultivation issues in selected districts**



**DO WE KNOW WHAT WE SHOULD BE EATING?**
**Consumption Patterns of Fruit and Vegetables**



**IMPACT OF HOME GARDEN COCONUT CULTIVATION ON COCONUT KERNEL BASED INDUSTRIES IN SRI LANKA**



**POLICIES THAT MATTER OR ARE FORGETTABLE**
**An evaluation of paddy policies in Sri Lanka: 1998 to 2018**



**THATTUMARU - KATTIMARU AND PRODUCTIVITY**
**An Assessment of Traditional Tenurial Systems in The Wet Zone**



**IT IS NOT JUST WATER THAT FLOWS DOWNSTREAM**
**Water Management in the Eastern Slopes of the Central Highlands**



**LAND DEVELOPMENT ORDINANCE IN ACTION**
**Achievements and Prospects of Highland Alienation**



**MINOR IRRIGATION REHABILITATION**
**An Assessment of Awarding Rehabilitation Contracts to Farmer Organizations**



**MOBILE BASED SOLUTION FOR PEST AND DISEASE MANAGEMENT IN PADDY CULTIVATION**

**பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 17 ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டமை கொவிட் -19**



**FACTORS INFLUENCING VEGETABLE FARMER'S DECISIONS**



**VALUE CHAIN ANALYSIS OF THE MILK INDUSTRY IN SRI LANKA**



**TRANSACTION COSTS: POTATO AND RED ONION**



- **OFC CULTIVATION IN THE NORTHERN PROVINCE: SSUES AND POSSIBLE SOLUTIONS**
- **CROP PRODUCTION PRACTICES IN VILLAGE TANK SYSTEMS IN DRY ZONE SRI LANKA**
- ශ්‍රී ලංකාවේ කුළුබඩු කර්මාන්තයේ සමාජ - ආර්ථික ත්ත්වය සහ වර්තමානයේ එම කර්මාන්තය මුහුණ දී ඇති ගැටලු සහ විභවතා : ගම්මිරිස් වගාව ආශ්‍රිත අධ්‍යයනය



## ஆராய்ச்சி

இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை, கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக நிறுவனத்தின் முழுப் பணியாட்படை கிட்டவில்லை. இருப்பினும், நன்கு வகுத்தமைக்கப்பட்ட அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைய முடியும்.

2021ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின்படி, ஆராய்ச்சி அறிக்கைகளை எழுதுவதற்கு வழிவகுத்த 22 சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகள், மற்றும் விவசாயச் சந்தை தகவல் கருத்திட்டம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆராய்ச்சி தொடர்பான முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியன சம்பந்தப்பட்ட பயனுரித்தாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தவிர, ஏனைய நிறுவனங்களுக்கும் மற்றும் துறைகளுக்கும் HARTIஇன் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில், சரியான நேரத்தில் சிக்கல்கள் குறித்த பல அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. தேசிய விவசாயக் கொள்கை வரைவை மதிப்பீடு செய்தல், "இயற்கை விவசாயத்திற்கு மாற்றுதல்: சிக்கல்கள், சவால்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் உத்திகள்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தல் மற்றும் ராஜாங்க விவசாய அமைச்சின் இயற்கை விவசாயம் குறித்த கேள்வித்தாளுக்கு பதிலளிக்கும் வகையில் ஒரு கருத்தை சமர்ப்பித்தல், சேதன விவசாயத்திற்கான சாலை வரைபடத்தை முன்வைத்தல், உயிரகத்திரள் விவரப்பட்டிலைத் தயாரித்தல், தேசிய சுற்றுச்சூழல் கொள்கையை மதிப்பீடு செய்தல் மற்றும் களப்பயணத்தின் அடிப்படையில்

காடழிப்பு குறித்த அறிக்கை தயாரித்தல் ஆகியவை கடந்த ஆண்டின் முக்கிய செயற்பாடுகளின் மத்தியில் விளங்குகின்றன.

கொவிட்-19 தொற்றுநோயைத் தொடர்ந்து நிலுவையில் இருந்த 17 ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டமை 2021ஆம் ஆண்டில் மற்றொரு விதிவிலக்கான சாதனையாகும்.

பின்வரும் திட்டங்களுக்கு தேசிய வரவு-செலவுத் திட்டத் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை: உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (ICDP) கீழ் நவீனமயமாக்கப்பட வேண்டிய பிரத்தியேக பொருளாதார நிலையங்களின் முந்தைய சூழ்நிலைப் பகுப்பாய்வு, விவசாயிகளின் அறக்கட்டளை நிதியத்தினால் செயல்படுத்தப்பட்ட "க்ருஷி சக்தி" கடன் திட்டத்தின் மதிப்பீடு மற்றும் நிறுவனரீதியிலான ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலை உருவாக்குதல்.

நிறுவகத்தின் நோக்கெல்லையின் கீழ் வரும் சிக்கல்களைக் கவனத்திற்கெடுப்பதற்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவை (RTC) வலுப்படுத்துதல், நிறுவகத்தை மீண்டும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட மூலோபாயத்திற்கான கட்டமைப்பைத் தயாரித்தல், மீள்-நிலைப்படுத்தலுக்கான முன்மொழிவுகள் குறித்து RTCக்கு அறிவித்தல் மற்றும் அவர்களின் பின்னூட்டலைப் பெறுதல், நிறுவனரீதியிலான கட்டமைப்பிற்கு ஆளுநர் சபையின் ஒப்புதலைப் பெறுதல் ஆகியன ஆண்டின் முக்கிய செயற்றிறன்களாகும்

தரவு முகாமைத்துவப் பிரிவை அமைப்பதன் மூலம் சந்தைத் தகவல் தேவைகளை கவனத்திற்கெடுப்பதை நோக்கமாகக் கொண்ட "சந்தைத் தகவல் கருத்திட்டத்தை" புதுப்பிப்பதும் மற்றும் அதை முழு தானியங்கு அமைப்பாக மாற்றுவதும் இந்த ஆண்டு தொடங்கப்பட்டது.



# கிராமிய முன்னேற்றம்




### 01. முடிக்கப்பட்ட ஆய்வுகள்

**செயல்பாட்டில் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் (LDO): மேட்டுநில உரிமை மாற்றத்தின் சாதனைகள் மற்றும் வாய்ப்புவளங்கள்**

**ஆர்.எம்.டி.எச். ரத்நாயக்க**

**நோக்கம்:** காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மேட்டு நிலங்களின் பயன்பாட்டை மீளாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான சாதனைகளையும் மற்றும் வாய்ப்புக்களையும் அடையாளங்காணுதல்.




### முக்கிய முடிவுகள்

1. மேட்டு நிலங்களைப் பயன்படுத்துவதில் விவசாய நோக்கங்களை விட குடியிருப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.
2. விலங்குகளால் ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்துதல், போதுமான நீர் வழங்கல், நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்குதல் போன்ற காணி அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளுக்கு மக்கள் தீர்வுகளை எதிர்பார்க்கின்றனர்.

### பரிந்துரைகள்

1. கணிசமானளவு துண்டாக்கப்பட்டுள்ள மேட்டு நிலங்களை அடையாளங்கண்டு, கடுமையான சட்டங்களை விதித்தல்.
2. தற்போதுள்ள நிலம் மற்றும் வீட்டுக் கொள்கைகள் ஆகியன பற்றிய முழுமையான விசாரணை மற்றும் பொதுமக்களின் வீட்டுத் தேவைகளைக் கவனத்திற்கெடுத்தல்.
3. தேவைப்படும் கிராமப்புற இளைஞர்களுக்கு பொருத்தமான வீடமைப்புத் திட்டங்களை (தொடர்மாடிகள்/கொத்தணிகள்) அறிமுகப்படுத்துதல் மற்றும் தொடங்குதல்.

## 02. சிறு நீர்ப்பாசனப் புனரமைப்பு: விவசாயிகள் அமைப்புகளுக்கு புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான ஒரு மதிப்பீடு

**எம்.ஏ.சி.எஸ். பண்டார**

**நோக்கம்:** போட்டி ஏல நடைமுறைக்கு வெளியே விவசாயிகள் அமைப்புகளுக்கு புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்குவதன் தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் அசல் இலக்குகள் எட்டப்பட்டதா என்பதை ஆய்வு செய்தல்.

### முக்கிய முடிவுகள்

1. சிறு நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள சிலரைத் தவிர ஏறக்குறைய பாதி விவசாயிகள் அமைப்புகளுக்கு அத்தகைய அனுபவம் பற்றாக்குறையாகவுள்ளது.
2. அவற்றின் நிதி நம்பகத்தன்மையை விரிவுபடுத்துதல் மற்றும் மென்பொருள் மற்றும் வன்பொருள் திறன்களை மேம்படுத்துதல் போன்ற சிறிய நீர்ப்பாசன ஒப்பந்தங்களுக்கு விவசாயிகள் அமைப்புகள் குறிப்பிடத்தக்க பலன்களைப் பெற்றுள்ளன.
3. தொழில் வல்லுநர்களால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, நன்கு வரையப்பட்ட அளவுகோல்கள் இருந்தபோதிலும் கூட, புனரமைப்புத் தேவைகளை அடையாளங்காண்பதில் கடுமையான குறைபாடுகள் இருப்பதாக பெரும்பாலான விவசாயிகள் மேற்கோள் காட்டியுள்ளனர்.

### பரிந்துரைகள்

1. விவசாயிகள் அமைப்புகள், நீர் முகாமைத்துவ மற்றும் பராமரிப்பு மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் தொடர்பான செயல்பாடு ஆகியவற்றை வலுப்படுத்துதல் என அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவதை வழக்கமான பயிற்சி மற்றும் திறன்கள் முன்னேற்றச் செயலமர்வுகள் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

2. உகந்த பொருளாதார உற்பத்தித்திறனை அடைவதற்காக புனரமைப்புக்கான குளங்களைத் தேர்ந்தெடுப்பதில் தேவை அடிப்படையிலான

அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும், அத்தகைய உருவாக்கத்தில், உண்மையான தேவைகள், குளங்களின் கொள்ளளவு, பயனாளிகளின் எண்ணிக்கை, பயன்பாடுகள், நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் முந்தைய புனரமைப்பின் கால அளவு போன்ற காரணிகள் பொறுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. அடையாளத்தின் ஆரம்ப நிலை முதல் திட்டத்தை செயல்படுத்துவது வரை, முழு பயனாளிகளின் பங்கேற்பு அனுமதிக்கப்பட வேண்டும்.

**03. தட்டு மாறு – கட்டி மாறு முறைமை மற்றும் உற்பத்தித்திறன்.**
**ஈர வலயத்தில் பாரம்பரிய நிலவுரிமை முறையின் ஒரு மதிப்பீடு**

**ரி.பி.முனவீர**

**நோக்கம்:** ஈர வலய நெல் விவசாயத்தில் பாரம்பரிய குத்தகை முறையின் (தட்டு மாறு மற்றும் கட்டி மாறு முறைமை) தாக்கத்தை மதிப்பிடுதல் மற்றும் தொடர்பான பிரச்சினைகளுக்கு பரிந்துரைகளை முன்மொழிதல்

**முக்கிய முடிவுகள்**




1. ஈர வலய நெற்பயிர் காணிகளில் உள்ள தட்டு மாறு மற்றும் கட்டி மாறு முறைமைக்கு உள்ளார்ந்த பண்புகள் குறைந்து வருகின்றன.

2. உயர்வான உற்பத்தி ஆகுசெலவு மற்றும் குறைந்த அறுவடை ஆகியன நெல் விவசாயத்தின் நிதிசார் வருவாயை மங்கச் செய்துள்ளன.

3. உயர் கல்வி, நகரமயமாக்கல், சிறிய நில அடுக்குகள், இலாபகரமான வருமானம் ஈட்டும் முறைகளைப் பெற்றிருத்தல் மற்றும் தனித்துவமான உரிமைத்துவம் போன்ற சமூகப் பொருளாதார மற்றும் உரிமைக் காரணிகளின் நிமித்தம், ஈர வலய விவசாயிகள் இந்த முறையிலிருந்து விலகிவிட்டனர்.

**பரிந்துரைகள்**

1. கமநல நிலையங்களின் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் அல்லது மரபுரிமையைப் பிரித்து, நில அடுக்குகளை வணிகமயமாக்குதல் மற்றும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதன் மூலம் தட்டு மாறு மற்றும் கட்டி மாறு முறைமையை மேம்படுத்துவதற்கான புதிய நிறுவன பொறிமுறையை நிறுவுதல். விவசாய அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட விவசாய அபிவிருத்தி சபை, காணி வங்கிகள் மற்றும் விவசாய தீர்ப்பாயம் ஆகியவற்றை நிறுவுவது பரிந்துரைக்கப்படுகிறது.

2. கடுமையாக துண்டாக்கப்பட்ட அல்லது பரவலாக சிதறிய காணிகளை ஒன்றிணைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் மறுபகிர்வு செய்தல்.

**04. இலங்கையின் தேசியரீதியில் முக்கியமான விவசாய பாரம்பரிய முறைமைகள் (NIAHS): அங்கீகாரம் மற்றும் பேணல்**

**ஜே.ஏ.யு.பி.ஜயசிங்க**

**நோக்கம்:** இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாயப் பாரம்பரிய முறைமைகளை முறையாக அடையாளங்காணுதல் மற்றும் பேணல் முறைகளை முன்மொழிதல்.

**முக்கிய முடிவுகள்**

1. தேர்வு அளவுகோல்கள் மற்றும் வரையறை ஆகியன பின்வருவன போன்ற நான்கு முக்கிய காரணிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன;

   அ. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாய பாரம்பரிய முறைமைகளின் செயல்பாட்டு அமைப்பு, செயல்பாடுகள் மற்றும் நிர்வாகக் கோட்பாடுகள் ஆகியவற்றை அடையாளங் காணுதல்.

   ஆ. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாயப் பாரம்பரிய முறைமைகளின் பொருளாதார உள்ளீட்டைக் கண்டறிதல்.

இ. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாயப் பாரம்பரிய முறைமைகளின் உணவுப் பாதுகாப்பைக் கண்டறிதல்.

ஈ. நிலையான விவசாய முறைமையின் கருத்து.

2. ஐந்து பொதுவான அளவுகோல்கள், ஏழு பாரிய திட்டவட்டமான அளவுகோல்கள் மற்றும் 28 துணை அளவுகோல்கள் ஆகியன தேர்வு அளவுகோலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



**பரிந்துரைகள்**

1. இலங்கையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவசாய பாரம்பரிய முறைமைகளின் பேணல் மற்றும் முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல்.

2. ஒரு யதார்த்தமானதும், விளக்கமானதும் மற்றும் நேரகாலத்திலானதுமான பேணல் மற்றும் முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல்.

3. பேணல் மற்றும் முகாமைத்துவ திட்டத்தின் செயல்முறை கட்டம் கட்டமாக்கப்பட வேண்டும்.

## 05. திட்ட முகாமைத்துவம்: விவசாயத் திணைக்களத்தினாலும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் அபிவிருத்தித் திட்டங்களை/கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள்

**ஐ.கே . எதிரிசிங்க**

விவசாய அமைச்சின் கோரிக்கையின் பேரில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**நோக்கம்:** விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியன எதிர்நோக்கும் சவால்களை கண்டறிந்து பயனுள்ளதும் மற்றும் திறமையானதுமான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். விவசாய அமைச்சின் கோரிக்கையின் பேரில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

**முக்கிய முடிவுகள்**

1. விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியன தொடர்பான 47 மற்றும் 16 சவால்களை இந்த ஆய்வு அடையாளங்கண்டுள்ளது.

**விவசாய அமைச்சு:**

I. திட்டம் தொடங்குதல் மற்றும் திட்டமிடல் கட்டத்தில்: இரண்டு தலைப்புகளின் கீழ் 14 சவால்கள்; திட்டத்தின் நோக்கெல்லை மற்றும் கருத்திட்ட திட்டமிடல்.

II. செயல்படுத்தும் கட்டத்தில்: நிதிப்படுத்தல், மனித வளங்கள், செயல்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு போன்ற ஐந்து சவால்கள்.

III. கண்காணிப்பிலும் மற்றும் இறுதிக் கட்டத்திலும் ஐந்து சவால்கள்.

**கமநல சேவைகள் திணைக்களம்**

I. கருத்திட்டம் தொடங்குதல் மற்றும் திட்டமிடல் கட்டத்தில்: முக்கிய தலைப்பின் கீழ் 02 சவால்கள்; கருத்திட்ட திட்டமிடல்.

II. செயல்படுத்தும் கட்டத்தில்: நிதிப்படுத்தல், மனித வளங்கள், செயல்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு போன்ற ஐந்து சவால்கள்.

III. கண்காணிப்பிலும் மற்றும் இறுதிக் கட்டத்திலும் ஐந்து சவால்கள்.

**பரிந்துரைகள்**

பதிவு சட்ட பகுப்பாய்வு, முடிவுகள் வளக் கட்டமைப்பு, மானிய விளக்கப்படங்கள் போன்ற முறைகள் மீது கவனம் செலுத்த வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் பயனுரித்தாளர்களின் பங்கேற்பை இயலச்செய்தல்.

## நடை முறையிலான ஆய்வுகள்

### 01. இலங்கையில் உணவுப் பயிர் துறையில் விவசாய விரிவாக்கம் மற்றும் ஆலோசனை சேவை: சவால்கள், சிக்கல்கள் மற்றும் விருப்பத்தேர்வுகள்

**எம்.டி.எஸ்.லூர்து**

**நோக்கம்:** உணவுப் பயிர்த் துறையில் உள்ள சிக்கலளையும், சவால்களையும் மற்றும் சாத்தியமான மேம்படுத்தல்களையும் கண்டறிதல் மற்றும் அதன் மூலம் திறமையான மற்றும் உற்பத்தி கருத்திட்ட சேவைக்கான ஆதரவான முன்மொழிவுகளை முன்வைத்தல்.

**முக்கிய முடிவுகள்**

1. கருத்திட்ட சேவைகளின் உள்ளடக்கம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு, மனித வள முன்னேற்றம், கருத்திட்ட பயனுரித்தாளர்களின் பங்கேற்பு மற்றும் கண்காணிப்பு, நிர்வாகம் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையின் உணவுப் பயிர்கள் துறை குறைபாடுடையதாகும்.

2. உலகமயமாக்கல், அதிகாரப் பகிர்வு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் போக்குகள் தொடர்பான வரவிருக்கும் சவால்களை எதிர்கொள்ள தற்போதைய கருத்திட்டத்தின் செயல்பாட்டு மட்டம் மற்றும் நிறுவன நிலை ஆகியவை மீளவாயப்பட வேண்டும்.

3. ஆராய்ச்சி நிறுவனங்களினதும், கருத்திட்ட அலுவலர்களினதும் மற்றும் விவசாயிகளினதும் அறிவு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பரிமாற்றத்தின் பயனுள்ள அளவைப் பராமரிப்பது அவசியமாகும். அந்த வகையில் தற்போதைய கருத்திட்டச் சேவையின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஒரு பரந்த ஆய்வினை நடத்துவது அவசியமாகும்.

**பரிந்துரை**

ஒரு சட்ட அடித்தளத்தினால் ஆதரவளிக்கப்படுகின்றதும் மற்றும் விவசாயிகளின் தேவைகளை முன்னோக்கி கொண்டு வருவதற்கான ஒரு தொலைநோக்கு மற்றும்

செயற்பணி ஆகியனவற்றைக் கொண்டதுமான ஒரு தேசிய கருத்திட்டக் கொள்கையை உருவாக்குதல்.



**02. இளைஞர் பங்கேற்பினதும் மற்றும் சேதன நெல் பயிர்ச்செய்கையினதும் மூலம் தீவிரமான நெல் காணி பயன்பாட்டைத் துரிதப்படுத்துதல்.**




**எம்.பி.எப்.ரிபானா**

**நோக்கம்:** LCWZஇல் நெல் பயிர்ச்செய்கையில் உள்ள அறிவு இடைவெளிகளை அடையாளங்காணுதல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள தீவிரமான நெற் காணிகள் கைவிடப்படுவதைத் தடுப்பதற்கு இளைஞர்களின் சக்தியையும் மற்றும் சேதன அணுகுமுறையையும் ஆராய்தல்.

**முக்கிய முடிவுகள்**

1. முந்தைய ஆய்வுகளில் உருவாக்கப்பட்ட விஞ்ஞானரீதியிலான கண்டுபிடிப்புகளையும் மற்றும் பரிந்துரைகளையும் பகிர்ந்து கொள்வதில் திறமையின்மை கண்டறியப்பட்டுள்ளது.

2. ஆய்வுப் பகுதியில், 11 இளைஞர் விவசாயி சங்கங்கள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டன.

**பரிந்துரைகள்**

1. ICT கருவியைப் பயன்படுத்தி ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் பரந்த விநியோகம் மூலம் அறிவு இடைவெளியை நிரப்புதல்.

2. ஒரு வள மையத்தை உருவாக்க இளைஞர் விவசாயி சங்கங்களை ஒன்றிணைத்து, வலுப்படுத்துதல்.

3. விவசாயிகளின் கல்வி மூலம் சேதன விவசாயத்தை மேம்படுத்தல்.

**03. கீழ்நாட்டு ஈர வலயத்தில் கைவிடப்பட்ட நெற்பயிர் காணிகளில் மீண்டும் விவசாயம் செய்யும் முயற்சிகளின் வெற்றி**

**ஆர்.எம்.டி.எச்.ரத்நாயக்க**

**நோக்கம்:** LCWZஇல் கைவிடப்பட்ட நெற் காணிகளில் மீண்டும் பயிர்ச்செய்கைத் திட்டங்களின் வெற்றியை மதிப்பிடுதல்

**முக்கிய முடிவுகள்**

1. தொழில்நுட்பச் சிக்கல்கள் (நீர் வழங்கல், நீர்வழிப் பாதைகளின் புனரமைப்பு) பெரும்பாலும் நெற்பயிர்கள் கைவிடப்படுவதற்குக் காரணமாகும்.

2. விவசாயிகளினதும் மற்றும் அதிகாரிகளினதும் முயற்சி மற்றும் ஆர்வம் ஆகியவற்றின் காரணமாக கைவிடப்பட்ட நெற்பயிர்கள் வெற்றிகரமாக மீண்டும் பயிரிடப்பட்டுள்ளன.

3. தரம், நிதி மற்றும் பொருள் மானியங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயிகளின் தேவைகள் நடந்து கொண்டிருக்கும் திட்டங்களால் முழுமையாக கவனத்திற்கு எடுக்கப்படவில்லை.

**பரிந்துரைகள்**

1. அப்பகுதியில் உள்ள தொழில்நுட்ப அதிகாரிகளின் உதவியுடன் துல்லியமான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் வலுவான கருத்திட்ட முன்மொழிவுகளை வரைதல்.

2. விருத்தியடைந்த அம்சங்களைப் பராமரிப்பதற்கான திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அதன் பொறுப்பை விவசாய அமைப்புகளுக்கு வழங்குதல்.



**04. உள்ளூர் விவசாய தொழில்முனைவோரால் நடத்தப்படும் நிலையங்களை வழங்கும் விவசாய சேவை மூலம் பண்ணை இயந்திரமயமாக்கலைத் தொடங்குதல்: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்**

**எம்.ஏ.சி.எஸ்.பண்டார**

**நோக்கம்:** முக்கிய விவசாயப் பொருட்களின் மதிப்புச் சங்கிலியில் பல்வேறு விவசாய சேவைகளை வழங்கி விவசாய நிலையங்கள் மூலம் விவசாய இயந்திரமயமாக்கலைத் தொடங்குவதற்கு நிலையான மற்றும் வணிக மாதிரியை உருவாக்குதல்.




**முக்கிய முடிவுகள்**

1. அரசின் தலையீட்டுடன் வழங்கப்பட்ட விவசாய இயந்திரங்கள் திறமையின்மை மற்றும் குறைபாடுள்ள கொள்முதல் ஆகியவற்றின் காரணமாக தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளது.




2. நிலத்திற்கு மாறாக சரீரஉழைப்பு ஒரு கட்டுப்படுத்தும் காரணியாகும்.

**பரிந்துரைகள்**

1. இயந்திராதிகள் தொடர்பான தொழில்நுட்பம் சிறு விவசாயிகளுக்கு/ஆதார விவசாயிகளுக்கு வழங்கப் படாமல் தனியார் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட

வேண்டும். இத்தகைய நடவடிக்கை விவசாய இயந்திராதி விநியோகஸ்தர்களின் தற்போதைய வணிகத்தை பாதிக்கக் கூடாது.

2. சந்தைத் தோல்வியை நீக்குவதற்கும் மற்றும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் ஒரு வசதியாளராகச் செயல்பட வேண்டும். நிறுவன ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

## 05. காணி சீர்திருத்தங்கள் மற்றும் நில ஒருங்கிணைப்பு: நிலையான கிராமிய முன்னேற்றத்தை நோக்கி

**ஆர்.எம்.எம்.எச்.கே. ரம்பொடகெதர**

**நோக்கம்:** இலங்கையில் காணிச் சீர்திருத்தம் மற்றும் காணி ஒருங்கிணைப்புத் திட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் இலங்கையில் சிறு உடமையாளர் விவசாயத் துறை/தோட்டங்களில் காணிகளை ஒருங்கிணைப்பதற்கான உத்திகளைக் கண்டறிதல்.

### முக்கிய முடிவுகள்

1. பல நாடுகளில் செயல்படுத்தப்படும் கொள்கை-தலைமையிலான காணிச் சீர்திருத்தம் மற்றும் விவசாய மேம்பாட்டு இயக்கங்கள் ஆகியவற்றில் காணி ஒருங்கிணைப்பு ஒரு உச்சநிலையிலான முன்னுரிமை யாகும்.

2. முந்தைய காணி ஒருங்கிணைப்பு திட்டங்களை மதிப்பாய்வு செய்யும் போது, நீண்ட கால பொதுக் கொள்கைகளிலும் மற்றும் அந்தத் திட்டங்களிலும் இடைவெளி உள்ளதுடன், இது நிலைத்தன்மையின் சிக்கலை எழுப்புகிறது.

3. மேற்கூறிய திட்டங்களின் நோக்கங்கள் பரந்த கிராமிய மற்றும் விவசாயம்சார் நோக்கங்களுடன் ஒத்துப் போவதில்லை.

### பரிந்துரைகள்

1. நில உகப்பாக்கம் மற்றும் நிலம் துண்டு துண்டாக உள்ள சிக்கல்களைக் குறைப்பதற்கு நிலக்கூறு பிணைப்பினை ஆரம்ப கட்டமாக அறிமுகப்படுத்தலாம்.

2. காணி ஒருங்கிணைப்பு தொடர்பாக, விவசாய சமூகங்கள் நீண்ட கால விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி நோக்கங்களில் கவனம் செலுத்துவதிலும், நிலையான காணி சீர்திருத்தங்கள்/ கொள்கைகளுடன் அவற்றை இணைப்பதிலும் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும்.

3. அனைத்து பயனுரித்தாளர்களின் பங்களிப்புடன் காணிகளை ஒருங்கிணைப்பதில் தேசிய அளவிலான தலையீடு செய்யப்பட வேண்டும்.

**06. இலங்கையில் பண்ணை தொழில்முனைவு மூலம் காளான் கைத்தொழிலை மேம்படுத்தல்**

**எஸ்.பி.பெர்னாண்டோ**




**நோக்கம்:** இலங்கையின் காளான் தொழிலை மேம்படுத்தவும் அத்துடன் அதன் மூலம் கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார மற்றும் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் விவசாயிகளின் தொழில் முனைவுசார் நடத்தையையும் மற்றும் வளர்ந்து வரும் விவசாய வணிக வாய்ப்புகளையும் மதிப்பிடுதல்.

அறிக்கை எழுதும் பணி நடந்து வருகிறது.



# சூழல்

2021உடன் தொடர்பாக, பிரிவில் மூன்று முடிக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் மூன்று தொடர்ச்சியான ஆய்வுகள் உள்ளன.

### 01. இலங்கை உலர் வலயத்தில் உள்ள கிராம குள முறைமைகளில் பயிர் உற்பத்தி நடைமுறைகள்.

**டபிள்யூ.எச்.ஏ. ஷாந்த**







**நோக்கம்:** இலங்கையின் உலர் வலயத்தில் வண்டல் படிந்த கிராம குள முறைமைகளில் சமீபத்திய காணி பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் தற்போதைய பயிர்ச்செய்கை முறை ஆகியவற்றை அடையாளங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

1. மனித நடவடிக்கைகளின் விளைவொன்றாக, கிராமப்புற எல்லங்கா குள அமைப்புகளின் நீர்ப்பிடிப்புப் பகுதி படிப்படியாகக் குறைந்து வருவதால், அருகிலுள்ள நிலங்கள் மற்றும் இருப்புக்கள் வயல் நிலங்களாக மாற்றப்படுவதால், குளத்தின் கீழ் மொத்த பயிர்ச்செய்கை பரப்பளவு கணிசமாக அதிகரித்துள்ளது.

2. விசேடமாக, பொது பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளில் அலட்சியம் மற்றும் சிறிய மற்றும் பெரிய புனரமைப்பு நடவடிக்கைகளில் நீண்ட கால உதாசீனம் மற்றும் கிராமப்புற குளங்கள் மீது கவனமின்மை ஆகியன காரணமாக, கிராம குளங்களின் நீர்ப்பாசனத் திறனில் கடுமையான சரிவு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

3. மனித நடவடிக்கைகளின் காரணமாக விளைவிக்கப்பட்டுள்ள அதீத மண் அரிப்பினால் தூண்டப்பட்ட குள வண்டல் கிராமிய குளங்களின் கொள்ளளவு குறைவதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

கிராமிய குளங்களைப் புனரமைப்பதற்கு முன் புனரமைப்பு தேவை மீது மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

முழு எலங்கா அமைப்பைச் சேர்ந்த குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு சிறிய குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் அல்லது அனுகூலமான செயல்பாட்டு மட்டத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

புனரமைப்பு நடைமுறையில், அருகில் உள்ள சுற்றுச்சூழலின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். நீர்ப்பிடிப்புப் பகுதி, குளங்களினுள் பாயும் வண்டல் மண் அளவுகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தாழ்வான நிலத்தின் கால்வாய்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**02. கீழ்நோக்கி பாய்வது வெறும் நீர் அல்ல: மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளில் நீர் முகாமைத்துவம்**




**டபிள்யூ.எச்.ஏ.ஷாந்த**

**நோக்கம்:** மத்திய மலைநாட்டுப் பிராந்தியத்தின் கிழக்கு சரிவுகளில் உள்ள பல்வேறு நீர் பயனர் குழுக்களிடையே நீர் முகாமைத்துவ சிக்கல்களை பகுப்பாய்தல் மற்றும் நீர் பங்கீட்டுக்கான தற்போதைய வழிமுறைகளை ஆய்வு செய்தல்.




**முக்கிய முடிவுகள்**

காடுகள் மற்றும் நீர்நிலை ஒதுக்குகள் மற்றும் புதர்க்காடுகள் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்படாத வணிகப் பயிர்கள் மற்றும் மரக்கறிகள் ஆகியன பயிரிடப்படுவதன் காரணமாக, கடந்த சில தசாப்தங்களாக மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காணி பயன்பாடு மற்றும் மண்ணின் மொத்த அடக்கம் ஆகியன கணிசமாக மாறியுள்ளன.




நீர் நுகர்வு மற்றும் பயனர் குழுக்களின் எண்ணிக்கை ஆகியன காலப்போக்கில் மிக அதிகமாக அதிகரித்து, மிகவும் சிக்கலான மற்றும் பலதரப்பட்ட நிலைமைகளை உருவாக்கி, நீர் மிகவும் அரிதான வளமாக மாறியுள்ளதுடன், பல்வேறு நீர் பயனர் குழுக்களிடையே கடுமையான போட்டியையும் உருவாக்குகிறது.




பாசனக் கால்வாய்களில் இருந்து பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்படாத நுகர்வு மற்றும் அதிக அளவு நீர் ஆகியவை நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ள கீழ் காணிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்திலும் மற்றும் உணவுப் பாதுகாப்பிலும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

**பரிந்துரைகள்**

மேல் நீர்பிடிப்பு பகுதி மற்றும் கால்வாய் இருப்புகளில் வணிகப் பயிர்களின் தீவிர பயிர்ச்செய்கை மற்றும் அதிக அளவு நீர் நுகர்வு தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன், அங்கீகரிக்கப்படாத விவசாயிகளுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு நீர்ப்பாசன மறுசீரமைப்பு ஆகியன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஒரு முறையான நடைமுறை வகுக்கப்பட வேண்டும்.

நீர் வடிகால் மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றின் திறனை அதிகரிப்பதற்கு நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் நேரகாலத்திலான புனரமைப்பு பொறுப்பெடுக்கப்பட வேண்டும்.



**03. தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இடைநிலைப் பருவ பயிர்ச்செய்கை சிக்கல்களில் OFCகள்**

**என்.பி.ஜி. சமந்த**

**நோக்கம்:** இடைநிலை பருவத்தின் போது நெல் காணிகளில் மற்ற வயல் பயிர்கள் தொடர்பான சிக்கல்களையும் மற்றும் தடைகளையும் அடையாளங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

1. பரிகரிக்கப்படாத விதைகளின் நடுகை, தரமான விதைகள் கிடைக்காமை, உயர்வான விதை விலை, விதை நோய்கள் பரவுதல் ஆகியவை முக்கிய கரினைகளாக இருந்தன.

2. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடைநிலைப் பருவத்தில் பாசிப்பயறு பயிர்ச்செய்கைகள் விலங்கினால் ஏற்படும் சேதங்களால், பெரும்பாலும் கால்நடைகளால் பாதிக்கப்படுகின்றன.

3. விலையின் ஏற்ற இறக்கம், பூச்சிகள் மற்றும் நோய்களால் குறைந்த வருமானம், வலுவான சந்தைப்படுத்தல் பொறிமுறையின்மை, போதுமான இயந்திரங்கள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய நிர்வாகத்தில் அனுபவமின்மை ஆகியவை இடைநிலைப் பருவத்தில் பாசிப்பயறு விவசாயிகள் எதிர்கொள்ளும் பாரிய சவால்களாகும்.

**பரிந்துரைகள்**

1. பருவகால பயிர்ச்செய்கைக்கு தரமான பாசிப்பயறு விதைகளை வழங்குவதில் உள்ள சிக்கலைத் தீர்க்க சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

2. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புக்கு போதுமான மேய்ச்சல் காணிகளை ஒதுக்கிடுவது பயிரிடப்பட்ட காணிகளுக்குள் கால்நடைகள் அத்துமீறி நுழைவதைக் குறைப்பதை நோக்கி இடைநிலை பருவத்தில் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக ஒரு முக்கியமான கொள்கை முயற்சியாகும்.

3. விதை உலர்த்துதல் மற்றும் சுத்தம் செய்தல் இயந்திரங்களை வழங்குவதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய நடைமுறைகளை அரசின் தலையீட்டின் மூலம் மேம்படுத்தலாம்.

# நடைமுறையிலான ஆராய்ச்சி

## 01. இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் பெறுமதியான பழப் பயிர் உற்பத்தியில் நீர் மற்றும் சக்தி நுகர்வுக்கான ஒருங்கிணைந்த தீர்வுகள்




**டி.பி.முனவீரகே**

**நோக்கம்:** இலங்கையில் அதிக பெறுமதியான பழப்பயிர்களை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் பாரம்பரிய நீர் மற்றும் சக்தி வழங்கல் நடவடிக்கைகளுக்கு மாறாக, தெளிப்பான் நீர்ப்பாசன முறைமை போன்ற திறமையான நீர் வழங்கல் முறைகளின் தொடர்பான முக்கியத்துவத்தையும் மற்றும் ஒப்பீட்டு அனுகூலங்களையும் ஆராய்தல்.

### முக்கிய முடிவுகள்

1. ஆய்வின் கீழ் கருதப்படும் அனைத்து பயிர்களுக்கும் நுண் நீர் வழங்கல் அமைப்புகளில் முதலீடு செய்வது பொருளாதாரரீதியாக சாதகமானது என்பதுடன், பயிரின் வாழ்நாளுடன் ஒப்பிடுகையில், முதலீட்டை குறுகிய காலத்திற்குள் திரும்பப் பெற முடியும்.

2. பயிரின் வளர்ச்சிக் காலம், நீர் இறைக்கும் கருவியின் திறன் மற்றும் தினசரி நீரின் தேவை ஆகியன பற்றிய அறிவு விவசாயிகளுக்கு பற்றாக்குறையாகவுள்ளது.

3. நுண் அமைப்புகளுடன் ஒப்பிடும்போது பாரம்பரிய நீர் வழங்கல் முறைகளின் ஆகுசெலவுகள் அதிகமாகும். மேலும், விவசாயிகளின் பயிர் நீர் தேவை மற்றும் பாசன நீர் வழங்கல் தொடர்பான அறிவின்மை பயிர்களுக்கு அதிகப்படியான நீர் பாய்ச்சலுக்கு வழிவகுக்கிறது என்பதுடன், இதனால் மின்சாரத்திற்கும் மற்றும் சரீர உழைப்புக்கும் மேலதிக செலவொன்று ஏற்படுகிறது.

### பரிந்துரைகள்

1. நீரின் உகந்த பயன்பாட்டிற்காக திட்டமிடப்பட்ட எந்தவொரு கொள்கையிலும், நீரின் தேவை மற்றும் மின் நுகர்வு முறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. காலநிலையைத் தகவமைத்துக் கொள்ளும் உத்தியாக நுண் நீர் விநியோகத்தின் அனுகூலங்களைத் அறிவிக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட வேண்டும்.
3. காலநிலை மாற்றங்களுக்கு மேம்பட்ட நெகிழ்வுத்தன்மை மூலம் மின் சிக்கனத்திற்காக பசுமை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நுண் நீர் வழங்கல் அமைப்புகளை ஊக்குவித்தல் மற்றும் அறுவடையை விரிவுபடுத்துதல் ஆகியன பரிந்துரைக்கப்படுகின்றன.



**02. சேதன உர உற்பத்தியின் வணிகமயமாக்கல்: சிக்கல்கள் மற்றும் வாய்ப்புவளங்கள்**

**எம்.பி.என்.எம். டயஸ்**

**நோக்கம்:** இலங்கையில் தரமான சேதன உரங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக சேதன உரங்களை வர்த்தக மட்டத்தில் உற்பத்தி செய்வதில் தற்போதுள்ள பிரச்சினைளையும் மற்றும் சாத்தியக்கூறுகளையும் அடையாளங்காணுதல்

**முக்கிய முடிவுகள்**

1. கலவை உரமானது வர்த்தக மட்டத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பிரதான சேதன உரமாகும் என்பதுடன், திரவ சேதன உர உற்பத்தியின் சதவீதம் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது.

2. உர உற்பத்திக்கான மூலப்பொருட்களின் பற்றாக்குறை, மூலப்பொருட்களின் விரைவான விலை அதிகரிப்பு, சேதன உரங்களுக்கான விலை

மற்றும் சந்தை ஆகியவற்றை நிர்ணயிக்க எந்த வழிமுறையும் இல்லை.

3. உற்பத்தியின் தரத்தைப் பேணுவதற்கான முறையான பொறிமுறை இல்லாத நிலையில் தரமற்ற சேதன உரப் பொருட்களை சந்தைக்கு வழங்குவது பெரும் சவாலாக உள்ளது.

**பரிந்துரைகள்**

- இலங்கைக்குள் சேதன உரங்களின் உற்பத்தியையும் மற்றும் பாவனையையும் அதிகரிக்க நீண்ட கால தேசிய மட்ட கொள்கையொன்றை வகுத்தமைத்தல்.
- சேதன உரங்களின் தரத்தைப் பேணுவதற்கு நன்கு அடிப்படையான வழிமுறையொன்றை வகுத்தல், அதே நேரத்தில் உற்பத்தியை அதிகரிக்க நிதி உதவி வழங்குதல்.
- சேதன உரப் பொருட்களுக்கு நிலையான சந்தையை நிறுவுதல் மற்றும் சேதன உரங்களை திறமையான உற்பத்திக்கான புதிய தொழில்நுட்பத்தையும் மற்றும் இயந்திரங்களையும் அறிமுகப்படுத்தல்

**03. இலங்கையில் மலையக மரக்கறி விவசாயத்தில் பயன்படுத்தப்படும் மண் பேணல் நடைமுறைகளை நிர்ணயிக்கும் காரணிகள்**

**ஜி.வி.என். அயோமி**

**நோக்கங்கள்:**

1. மலையக மரக்கறி விவசாயிகள் பின்பற்றும் மண் பாதுகாப்பு முறைகளைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிதல்.

2. நிலையான காணி முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பான அவர்களின் செலவுத் திறன், உற்பத்திச் செலவு மற்றும் அலகுக்கான லாபம் ஆகியவற்றின் தொடர்பை ஆய்வு செய்து, நிலையான மண் பாதுகாப்பு தொழில்நுட்பத்திற்கான உத்திகளையும் மற்றும் முன்முயற்சிகளையும் முன்மொழிதல் .

3. நிலையான மரக்கறி விவசாயம் மற்றும் விவசாயிகளின் மனோபாவத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் மண் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த அவர்களின் அறிவை மேம்படுத்துதல்.

ஆய்வு நடந்து வருகிறது.

# உணவு முறைமைகள்

இந்த விடயத்தின் கீழ், 12 முடிக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் 09 நடைமுறையிலான ஆய்வுகள் உள்ளன.

**01. "நாம் என்ன சாப்பிட வேண்டும் என்று எங்களுக்குத் தெரியுமா?" பழங்களினதும் மற்றும் மரக்கறிகளினதும் நுகர்வு முறைகள்**

**யு .ஆர்.டி. உதாரி**

**நோக்கம்:** மரக்கறிகளினதும் மற்றும் பழங்களினதும் நுகர்வினைப் பாதிக்கும் காரணிகளையும் மற்றும் நுகர்வினை அதிகரிப்பதில் உள்ள சாத்தியக்கூறுளையும் மற்றும் தடைகளையும் அடையாங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

- பெரும்பான்மையான குடும்பங்கள் (நகர்ப்புறம் - 69%, தோட்டம் - 69% மற்றும் கிராமிய - 56%) மரக்கறிகளினதும் மற்றும் பழங்களினதும் தேவைக்காக வெளிச் சந்தையை முழுமையாகத் தங்கியுள்ளன. மரக்கறிகளினதும் மற்றும் பழங்களினதும் தரம், புத்துணர்ச்சி, விலை மற்றும் பாதுகாப்பு ஆகியவை இந்த பொருட்களை வாங்குவதை பாதிக்கின்றன.

- இரசாயனங்களைப் பயன்படுத்தி பழங்களைச் செயற்கையாகப் பழுக்க வைப்பது, குறைந்த சுவை மற்றும் உயர்வன விலை ஆகியவை மரக்கறிகளையும் மற்றும் பழங்களையும் அதிகரிப்பதில் பெரும் தடையாக உள்ளன.



- இந்த ஆய்வில் பதிலளித்தவர்களில் சுமார் 97% பேர் தாங்கள் வாங்கும் மரக்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவை பாதுகாப்பானவை அல்ல என்றும் பூச்சிக்கொல்லிகளால் மாசுபட்டவை என்றும் நம்புகின்றனர்.

**பரிந்துரைகள்**

- வீடுகளில் மரக்கறி மற்றும் பழங்கள் ஆகியவற்றின் நுகர்வை ஊக்குவிக்க சமூக சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்கள் ஆகியவை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். குறைந்தபட்ச நுகர்வு மற்றும் பல்வகைப்படுத்தல் ஆகியன தோட்டத் துறையை முக்கியமாக இலக்காகக் கொள்ள வேண்டும். ஆரோக்கியமான உணவு மற்றும் முக்கியத்துவம் மற்றும் பலதரப்பட்ட மரக்கறிகளையும் மற்றும் பழங்களையும் உட்கொள்வதன் ஆரோக்கிய நன்மைகள் பற்றிய துல்லியமான தகவல்களை பொதுமக்களுக்கு அனுப்புவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- முதன்மையாக விவசாயத் திறனை அதிகரிப்பதன் மூலம் சேதனப் பொருட்களின் ஊக்குவிப்பு, சான்றிதழ் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்காக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைப்பதன் மூலம் சேதன பழங்களுக்கும் மற்றும் மரக்கறிகளுக்கும் சாத்தியமான சந்தையை உருவாக்க முடியும். உள்ளூர் சந்தைகளுக்கு சேதன மரக்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை வழங்குவதில் சேதன சான்றிதழை வழங்குவதற்கு தேசிய அளவிலான விதிமுறைகளை விதிக்க வேண்டும்.

- வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிப்பது கிராமப்புற மக்களிடையே மரக்கறிகளினதும் மற்றும் பழங்களினதும் நுகர்வை அதிகரிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

## 02. நெல் பயிர்ச்செய்கையில் பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவக்கான நடமாடும் அடிப்படையிலான தீர்வு

**எம்.பீ.எப். ரிபானா**

**நோக்கம்:** சமூகக் கணிப்பு நுட்பங்களைப் பயன்படுத்தி பூச்சிகளினாலும் மற்றும் நோய்களினாலும் ஏற்படும் சேதத்தைக் குறைக்க சனசமூக-அடிப்படையிலான அணுகுமுறைகளை உருவாக்குதல்.

### முக்கிய முடிவுகள்

1. பெரும்பாலான விவசாயிகள் (90%) பூச்சிகளையும் மற்றும் நோய்களையும் கண்டறிவதற்கு "லேடிபேர்ட்" நடமாடும் செயலியைப் பயன்படுத்தியுள்ளனர்.

2. அவர்களில் பாதிப் பேர் (45%) எதிர்பார்த்த தீர்வுகளைக் கொண்டுள்ளனர். 40 வயதுக்குட்பட்ட விவசாயிகள் பூச்சிகள் மற்றும் நோய்கள் ஆகியன குறித்து நடமாடும் தொலைபேசி மூலம் புகார் அளித்துள்ளனர்.

3. பெரும்பாலான நெல் விவசாயிகள் உயர் தொழில்நுட்ப நடமாடும் செயலிகளுடன் பொருந்தாத அடிப்படை பதிப்புகளின் நடமாடும் தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர். மோசமான சமிக்ஞை வலிமை மற்றும் இணைய வசதியின்மை ஆகியவை முக்கிய தடைகளாகும்.

### பரிந்துரைகள்

- விவசாயத்தை டிஜிட்டல்மயமாக்குவதற்கான வாய்ப்புகளை உணர்வதற்கு, விவசாய பகுதிகளுடனும் மற்றும் விவசாயிகளுடனுமான தொடர்பை மேம்படுத்துவது ஒரு முக்கிய தேவையாகும். எனவே, அனைத்து பயிர்ச்செய்கைப் பகுதிகளையும் உள்ளடக்கிய தகவல் தொடர்பு உள்கட்டமைப்பின் ஒருங்கிணைந்த அல்லது கூட்டு மேம்பாட்டிற்காக விவசாயிகளை அரசு மற்றும் தனியார் தொழில்முனைவோர் சென்றடைய ஊக்குவிக்க வேண்டும்.
- தகவல் தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் கருத்திட்ட செய்நுட்பறிவு ஆகியவற்றைக் கொண்ட அலுவலர்கள் ஒருவருக்கொருவர் தொடர்ந்து தொடர்பு கொள்ளும்

நிறுவனங்களாக கமநல சேவை நிலையங்கள் மாற்றப்பட வேண்டும்.
- விவசாயச் சமூகங்களை இ-தீர்வுகளுடன் பரீச்சயப்படுத்துவதற்கான கருத்திட்டங்களை விவசாயத் திணைக்களம் முன்வைக்கலாம்.



**03. மரக்கறி விவசாயிகளின் முடிவுகளில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

**ஐ.பி.பி.எம்.விஜேசிங்க**

**நோக்கம்:** மரக்கறி விவசாயிகளின் முடிவுகளைப் பாதிக்கும் தகவல் கிடைப்பது மற்றும் அணுகும் திறன் ஆகியவற்றை ஆய்வு செய்தல், அத்தகைய தகவல்களை அடையாளங்காணுதல் மற்றும் தவறான தகவல்களின் தீங்குகளைக் குறைப்பதற்கான உத்திகளை பரிந்துரைத்தல்,

**முக்கிய முடிவுகள்**

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "1920" விவசாயிகள் உதவி சேவை மற்றும் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட "6666" மொபிடெல் விவசாய விலைச் சுட்டெண் ஆகியன பற்றி கணிசமான சதவீத விவசாயிகள் அறிந்திருந்தனர். "கொவி மிதுரு" செயலியான “Krushi FM Web radio” மற்றும் “Govi App” ஆகியன பற்றி மிகக் குறைவான சதவீத விவசாயிகள் அறிந்திருந்தனர்.

பெரும்பாலான மரக்கறி விவசாயிகளுக்கு (65%) தொழில்நுட்பத் தடைகள் காரணமாக இந்தத் தகவல் பகிரப்படும் மூலங்களை அடைவதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.

- தற்போது, மரக்கறி விவசாயிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்குப் பல்வேறு மூலங்கள் (கருத்திட்டச் சேவை, விவசாய இரசாயன விற்பனை நிலையங்கள் மற்றும் அண்டை விவசாயிகள்) பயன்படுத்தப்படுகின்றன.

- மரக்கறி விவசாயிகளில் பாதிப் பேர் உற்பத்தித் தகவலைப் பெற்றுள்ளனர். அதிகளவு மக்கள் தொகை உற்பத்தி செலவை லாபத்துடன் ஈடுகட்டியுள்ளது.

**பரிந்துரைகள்**

- தகவலறிந்த முடிவுகளை எடுப்பது மீது, விவசாயிகளின் விழிப்புணர்வை உயர்த்துவதற்காக, விவசாய அமைச்சினால் விழிப்புணர்வுத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- மூன்றாம் தரப்பு மூலம் மேலிருந்து கீழ் மட்டம் வரை தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் அமைப்புகளின் செயல்திறன் அதிக அளவில் இருப்பதால், மரக்கறி விவசாயிகள் கருத்திட்ட அலுவலர்கள் மூலம் தகவல்களைப் பெறுவதை இயலச்செய்வதற்கு ஒரு முறைமையை அமைத்தல்.
- விதை விலை உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகள் மீது ஓர் உர மானியத்தையும் மற்றும் வரிச் சலுகையையும் வழங்குதல்.



**04. இலங்கை, பொலன்னறுவையில் உள்ள அரிசி பெறுமதிச் சங்கிலி**

**டபிள்யூ.ஏ.என்.விஜேசூரிய**

**நோக்கம்:** நாட்டின் முக்கிய நெல் பயிர்ச்செய்கை வலயமான பொலன்னறுவை மாவட்டத்தில் நெல்லின்/அரிசியின் மதிப்புச் சங்கிலியைப் பகுப்பாய்தல்.

**முக்கிய முடிவுகள்**

- நெல் பயிர்ச்செய்கையின் அலகு அறுவடை ஒரு புசல் ரூ.89-138 ஆக இருந்தது என்பதுடன், சிறு போகத்தின் போது பண்ணை விலை ஒரு கிலோவுக்கு ரூ. 48.00 - 52.00 (வெள்ளை நீள அரிசி) ஆகும். இது 2018இன் விலையுடன் ஒப்பிடுகையில் 25% வளர்ச்சியொன்றைக் குறிக்கிறது.

- நெல்லின்/அரிசியின் மதிப்புச் சங்கிலியில், நெல் விவசாயினால் 14% மதிப்புக் கூட்டல் மற்றும் அரிசி ஆலை உரிமையாளரால் 24% மதிப்பு கூட்டல் என இரண்டு நிகழ்வுகளில் மதிப்புக் கூட்டல் ஏற்படுகிறது. விவசாயி பெற்ற விலைக்கும் கொழும்பில் அரிசியின் சில்லறை விலைக்கும் இடையிலான விகிதாசாரம் 1.97- 2.2 ஆக தொடர்ந்துமிருந்தது.

- 2011ஆம் ஆண்டில், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள நான்கு பிரதான அரிசி ஆலைகளின் சந்தைப் பங்கு (செறிவு விகிதம்) 30%ஆக இருந்ததுடன், 2019ஆம் ஆண்டளவில் 50%ஆக அதிகரித்துள்ளது.

**பரிந்துரைகள்**

- அபரிமிதமான நெல் அறுவடையைப் பெறுவதன் மூலம் விவசாயிகளினால் பின்பற்றப்படும் விஞ்ஞானரீதியிலான பயிர்ச்செய்கை முறைகளை ஆய்வதன் மூலமும் அத்துடன் ஏனைய விவசாயிகளிடையே முறைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- விசேடமாக கிழக்கு மாகாணம், அனுராதபுரம் மற்றும் மன்னார் ஆகிய கிராமிய பகுதிகளில் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகள் திருப்திகரமான முன்னேற்றம் மற்றும் முக்கிய உணவு வர்த்தகர்கள் மூலம் பல பெரிய அளவிலான அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு முதலீடுகளை ஊக்குவித்தல், சிறிய அளவிலான அரிசி ஆலைகளுக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையை அறிமுகப்படுத்துதல்.
- அரிசி தவிடு எண்ணெய் மற்றும் அரிசி உமி சாம்பல் போன்ற தொழில்களில் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் மதிப்புச் சங்கிலியை உருவாக்குதல் மற்றும் அரிசி உற்பத்தி தொடர்பான பிற மதிப்பு கூட்டப்பட்ட தொழில்களை மேம்படுத்துதல்.

**05. முக்கியமான அல்லது மறக்கக்கூடிய கொள்கைகள்: இலங்கையில் நெல் கொள்கைகளின் மதிப்பீடு: 1998 முதல் 2018 வரை.**

**எம்.டி.டி.பெரேரா**

**நோக்கம்:** அரிசியில் தன்னிறைவை சாதிப்பதற்கு பயனுள்ள கொள்கைகளை வகுப்பதற்காக கடந்த இரண்டு தசாப்தங்களில் செயல்படுத்தப்பட்ட அரசாங்க கொள்கைகளை மதிப்பிடுதல்.

**முக்கிய முடிவுகள்**

1. நெல் உற்பத்தி தொடர்பான அனைத்து கொள்கைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்: நீர்ப்பாசனம், நெல் பயிர்ச்செய்கை மற்றும் பல்வகைப்படுத்தல், காணிகள், உரம், மானியங்கள், தழுவல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, நெல் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகம்.

2. உற்பத்தி விலை மதிப்பீடுகளிலும் மற்றும் சந்தை விலை மதிப்பீடுகளிலும், எதிர்மறை மதிப்பு சுட்டிக்காட்டப்படுகிறது, இது அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் கொள்கை கருவிகள் குறைந்தபட்ச பண்ணை வாயில் மற்றும் உள்ளூர் சந்தை விலையை உருவாக்கி அதன் மூலம் பொருட்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்துகிறது.

3. தகவலுக்கான அதிக அணுகலானது அறுவடை மற்றும் காலநிலை மாறுபாடுகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது, விசேடமாக மழைவீழ்ச்சி நெல் அறுவடையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**பரிந்துரைகள்**

நிலையான உற்பத்தித்திறன் மற்றும் காலநிலை பின்னடைவை அடைவதற்கு சாதகமான மூலோபாய முதலீடுகளில் கவனம் செலுத்தி, சந்தையை சிதைப்பது மற்றும் பொதுவான வருமானங்களை மாற்றுவதில் இருந்து விலகும் விவசாயக் கொள்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கை விவசாயிகளின் மாற்றத்தை அதைரியப்படுத்தும் அதே வேளையில் விவசாயக் குடும்பங்களின் வருமானத்தின் உயர்வொன்றை எளிதாக்கலாம். காலநிலை மாற்றத்திற்கு ஏற்றவாறு, குறிப்பாக ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி பாங்குகளுக்கு உதவும் கொள்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

## 06. இலங்கையின் பால் தொழில்துறையின் மதிப்பு சங்கிலிப் பகுப்பாய்வு

**எச்.எம்.எஸ்.ஜே.எம்.ஹிட்டிஹாமு**

**நோக்கம்:** பால்பண்ணைத் தொழில்துறையின் தற்போதைய மதிப்புச் சங்கிலியின் செயல்பாட்டாளர்களை அடையாளங்காணுதல், அத்துடன் தற்போதுள்ள மதிப்புச் சங்கிலியின் ஒவ்வொரு செயற்பாட்டாளரும் வளங்களைப் பயன்படுத்துவதன் செயல்திறனை மதிப்பிடுதல்.




### முக்கிய முடிவுகள்

1. பால் தொழில்துறையின் ஐந்து முக்கிய மதிப்புச் சங்கிலிகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்கள் உள்ளீடுகளை (தீவனம், நீர்) திறமையாகப் பயன்படுத்துவதில்லை எனவும் கண்டறியப்பட்டது.

2. ஆறு சதவீத பால் பண்ணையாளர்கள் மட்டுமே துணைத் தயாரிப்புகளை செய்கிறார்கள். பால் இனிப்புத் தயாரிப்பாளர்கள் மற்றும் பாரம்பரிய தயிர் உற்பத்தியாளர்கள் சிறந்த தொழில்முனைவோர்களாவர்.

3. மொத்த ஆகுசெலவில் சரீரஉழைப்பு ஆகுசெலவு பாதியாக உள்ளது.

### பரிந்துரைகள்

1. தொடர்புடைய தொழில்களில் பால் பண்ணையாளர்களை ஈடுபட ஊக்குவித்தல்.

2. உள்ளீடுகளின் திறமையான பயன்பாடானது பயிற்சி மற்றும் நடைமுறை செயலரங்குகளில் முக்கிய சிறப்பம்சமாக இருக்க வேண்டும்.

3. சிறிய அளவிலான பால் பண்ணைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது மற்றும் வளங்களை மேம்படுத்துவது ஆகியன குறித்து விவசாயிகளுக்கு அறிவூட்டுதல்.

## 07. இலங்கையில் தெங்கு பருப்பு சார்ந்த தொழில்துறைகளில் வீட்டுத் தோட்ட தெங்குச் செய்கையின் தாக்கம்

**வி.ஜி.என். அயோமி**

**நோக்கம்:** தேசிய தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதில் வீட்டுத் தோட்டத்தின் சாத்தியமான தாக்கத்தை ஆராய்தல்.

### முக்கிய முடிவுகள்

1. தேங்காய் பருப்பு சார்ந்த தொழில்துறைகளில் முக்கிய தடை; ஒப்பீட்டளவில் நிலையற்ற சந்தை நிலைமைகள் ஏராளமாக உள்ளன.

2. பூச்சிகளின் தீங்கு காரணமாக, தென்னை மரங்கள் ஆண்டுதோறும் பாதிக்கப்படுகின்றன.

3. உயர் உற்பத்தித் தரத்தைப் பேணுவதற்கு, பதப்படுத்தல் பகுதிகளில் நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை தயாரிப்பாளர்கள் வலியுறுத்தினர்.

### பரிந்துரைகள்

- நகர்ப்புற மற்றும் புறநகர் வீட்டுத் தோட்டங்களில் தென்னை நடுகையை ஊக்குவித்தல்.

- தென்னைப் பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க பயனுள்ள முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

- உயர் உற்பத்தி தரத்தைப் பராமரிக்கும் வகையில் பதப்படுத்தல் பகுதிகளில் நவீன தொழில்நுட்பம்.

## 08. விதைத் துறையை மறுசீரமைத்தல்

**யு.டி.ஆர்.உதாரி**

**நோக்கம்:** விதைத் துறையில் உள்ள சிக்கல்களையும் மற்றும் சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து, அதன் முன்னேற்றத்திற்கான உத்திளையும் மற்றும் கொள்கைகளையும் திட்டமிடுதல்.

### முக்கிய முடிவுகள்

1. தரக்குறைவான விதைகள், பூச்சிகள் மற்றும் நோய்கள் ஆகியவற்றின் விளைவாக உற்பத்தித்திறன் குறைதல், அறுவடையின் தரங்கள் குறைதல் மற்றும் விவசாயிகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்கான பொறிமுறையொன்று கிடைக்காமை ஆகியவை பிரதான பிரச்சினைகளாகும்.

2. அரசாங்க நிதிகள் மற்றும் உள்ளூர் மரபியல் வளப் பயன்பாடு ஆகியன மீது கடுமையான தாக்கங்களை விதை இறக்குமதி கொண்டுள்ளது.

3. விவசாயிகள் தரமான விதைகளை நேரகாலத்தில் பெறுவதற்கு அரசாங்க-தனியார் கூட்டாண்மைகள் மூலம் பொறிமுறைகளை வகுக்க வேண்டிய அவசியமொன்று உள்ளது.



**பரிந்துரைகள்**

1. விவசாய மற்றும் விஞ்ஞான முன்னேற்றத்தில் தற்போதைய சட்டத் தேவைகளுக்கும் மற்றும் புதிய போக்குகளுக்கும் இணங்க சட்டத்தை திருத்துதல் அல்லது புதியதொரு சட்டத்தை வரைதல்.

2. அரசாங்க -தனியார் கூட்டாண்மை மூலம், விதைத் துறையை வலுப்படுத்துதல்.

3. கமநல சேவைகள் நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கும் விதத்தில் விதைகள் விரிவாக்கச் சேவை மூலம் முறைசாரா விதைகளை உற்பத்தி செய்வதை மேம்படுத்த வேண்டும். பல்வேறு விதை உற்பத்தித் துறைகள் மீது விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதும், அத்துடன் விதைகளை உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதும் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்யும்.

**09. கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவு: உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம்**

**டபிள்யூ.எச்.டி.பிரியதர்ஷன**

**நோக்கம்:** உருளைக்கிழங்கினதும் மற்றும் வெங்காயத்தினதும் நுகர்வோர் விலை ஏற்ற இறக்கங்களின் போக்குகள் குறித்து கொள்கை வகுப்பாளர்களுக்கு கற்பித்தல்

**முக்கிய முடிவுகள்**

1. பாரம்பரிய விநியோகச் சங்கிலிகள் மூலம், சிறப்புப் பொருளாதார நிலையங்கள் மற்றும் கொழும்பு மெனிங் சந்தை ஆகியவற்றுக்கு ஒரு பெரிய அளவிலான வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியன விநியோகிக்கப்படுகின்றன.

2. விவசாயிகள் தங்கள் அறுவடையைச் சேகரிப்பாளர்களுக்கு விற்கிறார்கள் அல்லது போக்குவரத்து முகவர்கள் மூலம் மொத்த சந்தையின் தரகுக்கூலி முகவர்களுக்கு அனுப்புகிறார்கள்.

3. உருளைக்கிழங்கையும் மற்றும் வெங்காயத்தையும் சந்தைப்படுத்துவதில், தரகுக்கூலி முகவர்கள் மற்றும்

பெரிய அளவிலான வர்த்தகர்கள் ஆகியோர் பாரிய பங்கொன்றை வகிக்கின்றனர்.

**பரிந்துரைகள்**

- பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள், சிற்றுண்டிச்சலைகள், மருத்துவமனைகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் போன்ற கொள்வனவாளர்களுடன் விவசாயிகளை நேரடியாக இணைப்பதன் மூலம் அவர்களை ஒழுங்குபடுத்தி, விநியோகச் சங்கிலியில் இடைத்தரகர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
- களஞ்சிய வசதிகள், குளிர் இல்லங்கள், ஏற்றுதல் மற்றும் எடை நிலையங்கள் போன்ற சந்தைப்படுத்தல் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

**10. இலங்கையில் வாசனைத்திரவியத் தொழில்துறையின் சமூக-பொருளாதார நிலை மற்றும் தொழில்துறையின் சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் (மிளகு பயிர்ச்செய்கை தொடர்பான ஆராய்ச்சி)**

**ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ**

**நோக்கம்:** மிளகு பயிர்ச்செய்கையின் குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் தொழில்துறையின் மேம்பாட்டிற்கான தடைகள் ஆகியவற்றுக்கான காரணங்களை அடையாளங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

- மிளகு பயிர்ச்செய்கைக் காணிகளின் விரிவாக்கம் ஆறு குழுக்களினுள் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மிகச் சிறிய வகுதி 0.25-0.5 ஏக்கர்கள் (13%) ஆகும். அதே நேரத்தில் மிகப் பெரிய வகுதி 0. 5-1.0 ஏக்கர்கள் (33%) ஆகும்.
- இது ஒரு பெரும்பான்மையான (63%) விவசாயிகளுக்கு முக்கிய வருமான ஆதாரமாகும்.

**பரிந்துரைகள்**

1. தேசிய மட்டத்திலான ஒரு திட்டத்தில் மிளகு பயிர்ச்செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க விவசாயிகளை இணங்கச்செய்தல்.

2. ஏற்றுமதி விவசாய அமைச்சின் கள மட்டத்திலான கருததிட்டச் சேவைகளை மேலும் மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஓட்டத்தை விரிவுபடுத்துதல்.

3. மிளகு பயிர்ச்செய்கையின் தற்போதைய மதிப்பு கூட்டல் செயல்முறையை மேம்படுத்துதல் மற்றும் கிராம அளவில் மிளகு பதப்படுத்தும் வலயங்களை ஆரம்பித்தல்.

**11. வட மாகாணத்தில் OFC பயிர்ச்செய்கை: பிரச்சினைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகள்**

**ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ**

**நோக்கம்:** வட மாகாணத்தில் மேலதிக பயிர்ச்செய்கையில் உள்ள சிக்கல்களை ஆய்வு செய்து, கொள்கை உள்ளீடுகளுடன் தீர்வுகளை முன்வைத்தல்.

**முக்கிய முடிவுகள்**

1. விவசாயக் கிணறுகள் தொடர்ந்தும் பாழடைந்த நிலைமையில் இருப்பதால், மேலதிக பயிர்களுக்கு நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

2. தரமான விதைகளின் பற்றாக்குறை, பயிர்ச்செய்கையின் ஆகுசெலவுகள், அறுவடைக்கு நியாயமான விலையொன்றைப் பெறுவதற்கான இயலாமை மற்றும் பயிர்ச்செய்கைக் காணிகளை அணுகுவதில் உள்ள சிரமம் ஆகியவை மேலதிக பயிர்கள் துறையில் ஏனைய பிரச்சினைகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன.

3. உணவு இறக்குமதி மற்றும் சரீரஉழைப்பு ஆகியன மீது தவறான அரசாங்கக் கொள்கைகள், கருத்திட்டச் சேவைகளுக்கான விவசாய அலுவலர்களின் பற்றாக்குறை, உள்கட்டமைப்பு இல்லாமை, மற்றும் பூச்சிகள், நோய்கள் மற்றும் விலங்குகளினால்

ஏற்படும் சேதம் ஆகியவை மேலதிகப் பயிர்களில் குறைந்த உற்பத்தித்திறனுக்கு பங்களித்துள்ளன.

**பரிந்துரைகள்**

1. மொரகஹகந்த நீர்த்தேக்க திட்டத்தின் கீழ் உள்ளூர் குளங்களின் நீர் கொள்ளளவை அதிகரித்தல்.
2. நடுத்தர மற்றும் சிறிய அளவிலான குளங்களில் உள்ள வண்டலை அகற்றுவது மீது விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் அத்துடன் நுண்ணீர் பாசன முறைமைகளின் நீர் கொள்ளளவை விரிவுபடுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.
3. காணி உரிமையை வழங்குதல் மற்றும் ஏற்கனவே பயிரிடப்பட்ட சேனைக் காணிகளையும் மற்றும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளையும் விடுவித்தல்.

**12. உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் சந்தை இணைப்பை உருவாக்க டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தளத்தை மேம்படுத்துதல்**

**எச்.எம்.ஜே.கே.ஹேரத்**

**நோக்கம்:** சந்தைப்படுத்தல் சிக்கல்களையும் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளையும் குறைப்பதற்காக விவசாயச் சந்தையில் விவசாயிகள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோரை இணைப்பதற்காக நடமாடும் தொலைபேசிப் பயன்பாட்டை ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் புவியியல் தொழில்நுட்பப் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது.

**முன்னேற்றம்:** எந்தவொரு ஸ்மார்ட் தொலைபேசிப் பயனரும் தினசரி தேவைகளைப் பெறக்கட்டளையிட்டு விநியோகிக்கலாம். நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவனத்தின் உதவியுடன் இந்தப் பயன்பாடு மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது. "சுபிரி பொல" சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மொழிகளில் அணுகக்கூடியது. பெறப்பட்ட சேவைகள் குறித்த நுகர்வோர் பின்னூட்டல் பதிவு செய்யப்படலாம். இந்த நடமாடும் பயன்பாடு குறித்து பங்கேற்பாளர்களுக்கு நிறுவகத்தின் பயிற்சிப் பிரிவு அறிவூட்டுகிறது.

# நடைமுறையிலான ஆராய்ச்சி

## 01. இலங்கையில் 2006 பாற்பண்ணை முன்னேற்றக் கொள்கையின் மதிப்பீடு

**எச்.எம்.எஸ்.ஜே.எம். ஹிட்டிஹாமு**




**நோக்கம்:** 2006இன் பாற்பண்ணை உற்பத்தி அபிவிருத்திக் கொள்கை நடைமுறைப்படுத்தல் உத்திகளின் தாக்கத்தைப் புரிந்துகொள்தல் மற்றும் இலங்கையில் பாற்பண்ணை உற்பத்தியின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களினதும் மற்றும் செய்திட்டங்களினதும் பொருத்தம், விளைதிறன் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை மதிப்பிடுதல்.

### முக்கிய முடிவுகள்

1. தேசியப் பாற்பண்ணைக் கொள்கைக்கு அமைவாக, இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு தொகையிலான கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

2. அதிக உற்பத்தித்திறனைச் சாதிப்பதற்காக, குண்டசாலை செயற்கை கருவூட்டல் (AI) நிலையத்தில் செயற்கை கருவூட்டல் செய்திட்டத்தை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தொடர்கிறது. ஜெர்சி மற்றும் ஃப்ரீசியன் ஆகிய இனங்களின் விந்துவை உற்பத்தி செய்வதற்காக குண்டசாலையிலும் மற்றும் பொலன்னறுவையிலும் உள்ள AI நிலையங்கள் மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

3. தீவனத்தை ஊக்குவிப்பதற்காக திணைக்களம் பல்-எண்ணிக்கையிலான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தாவரவகை உணவுகளை உற்பத்தி செய்தல் மற்றும் அத்தகைய உணவைப் பேணுதல் ஆகியன தொடர்பான பிரச்சினைகள் தொடர்கின்றன.

### பரிந்துரைகள்

1. ஊட்டச்சத்து, இனப்பெருக்கம், தொழில்நுட்பம் மற்றும் கால்நடை முகாமைத்துவம் போன்ற

காரணிகளின் அறிவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

2. செயற்கைக் கருவூட்டல் நடைமுறைகளில் விலங்குகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவது குறித்து விவசாயிகளுக்கு அறிவூட்டுதல். கால்நடைகளுக்கு தாவரவகை உணவை வழங்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, விவசாயிகளுக்கு வசதிகள் செய்து, புல்வெளிகளை வளர்க்க ஊக்குவிக்க வேண்டும்.

## 02. இலங்கையில் மிளகாயின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போக்குகள்

**டபிள்யூ.எச்.ஏ.ஷாந்த**

**நோக்கம்:** உள்ளூர் கலப்பின மிளகாய் பயிர்ச்செய்கையை அவதானித்து, செத்தல் மிளகாயை உற்பத்தி செய்வதில் அதன் திறனை உறுதிப்படுத்துதல்.

### முக்கிய முடிவுகள்

1. அதிக அறுவடை, இலை சுருட்டு நோய்க்கு உயர்வான எதிர்ப்பு, நீண்ட ஆயுட்காலம் மற்றும் தாவரத்தின் மேலதிக உயரத்தின் காரணமாக எளிதாக அறுவடை செய்யலாம் ஆகிய காரணிகளின் நிமித்தம், இறக்குமதி செய்யப்பட்ட வகைகளை விட, உள்ளூர் கலப்பின வகை (MICH HY 1) மிகவும் பிரபலமானதாகும்.

2. சிறு விவசாயிகளுக்கு வணிக மட்டத்திலான பயிர்ச்செய்கையாக மாற்றுவதற்கு உள்ளூர் கலப்பின மிளகாய் விதைகளின் (MICH HY 1) உயர்வான சந்தை விலை தடையாக இருப்பதை அடையாளங்காணலாம்.

3. அறுவடைக் காலத்தில் மறுதலையிலான காலநிலை, தீவிரமான சரீரஉழைப்பு மற்றும் குறைந்த சந்தை விலை ஆகியவை செத்தல் மிளகாயை உற்பத்தி செய்வதிலிருந்து விவசாயிகளை அதைரியப்படுத்தியுள்ளன.

### பரிந்துரைகள்

1. விதை உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்ட பயிற்சித் திட்டங்கள் மற்றும் பிற உதவித் திட்டங்கள் மற்றும் பெப் திட்டங்கள் ஆகியன தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

2. உள்ளூர் கலப்பின மிளகாய் விதைகளுக்கு உச்சவரம்பு விலையொன்றை விதித்தல், தனியார் துறை விதை உற்பத்தியாளர் சந்தையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விதைகளின் தரத்தைப் பேணுவதற்கான விதிமுறைகளை வகுத்தமைத்து, நடைமுறைப்படுத்துதல்.

3. உள்ளூர் செத்தல் மிளகாய்க்கு சிறந்த விலை கிடைக்க, வாடிக்கையாளர்களின் அபிலாஷைகளைக் கரிசனைக்கு எடுத்து செத்தல் மிளகாயின் இறக்குமதி வரி மீளவாயப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் உள்ளூர் செத்தல் மிளகாயின் உற்பத்தியை ஊக்குவிக்கும்.

## 03. இலங்கையில் பெரிய வெங்காயத்தின் ஒரு மதிப்புச் சங்கிலி பகுப்பாய்வு

**எம்.ஆர்.என்.கே.ரம்புக்வெல்ல**

**நோக்கம்:** இலங்கையில் பெரிய வெங்காய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பான பாரிய பிரச்சினைகள், தடைகள் மற்றும் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை அடையாளங்காணுதல்.

### முக்கிய முடிவுகள்




1. பெரிய வெங்காய விதை உற்பத்தியில் விவசாயிகளினதும் மற்றும் தனியார் துறைகளினதும் தலையீடு படிப்படியாக குறைந்து, விதை உற்பத்தி மற்றும் இறக்குமதி ஆகியன பற்றிய தரவுகள் மற்றும் தகவல்கள் சரியாகப் பதிவு செய்யப்படவில்லை.

2. சுழலும் உள்ளூர் விதை ஆகுசெலவுடன் உற்பத்தி ஆகுசெலவு அதிகரித்துள்ளது.

3. மாதாந்த மற்றும் வருடாந்தத் தேவையை விட சீராக இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காய விநியோகம் மற்றும் அறுவடைக் காலத்தின் போது விசேட பண்ட வரி விதிக்கப்படவில்லை.

### பரிந்துரைகள்

1. விதை உற்பத்தியை நோக்கி விவசாயிகளையும் மற்றும் தனியார் துறையையும் ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், வதை உற்பத்தி மற்றும் இறக்குமதி ஆகியன மீது

புதுப்பிக்கப்பட்ட தரவுத்தளமொன்றைப் பராமரிக்கவும் வேண்டும்.

2. விதை உற்பத்தி ஆகுசெலவுகளைக் குறைக்க, இடுபொருட்கள் மீதான அரசின் துணைத் திட்டமொன்று நடைமுறையில் இருக்க வேண்டும்.

3. பெரிய வெங்காயத்தின் இறக்குமதியானது துல்லியமான மாதாந்த மற்றும் வருடாந்தத் தேவைகளைக் கணக்கிடும் உரிமம் பெற்ற அமைப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும், சிறப்பு பண்ட வரியைச் சரியான நேரத்தில் விதிக்கவும் வேண்டும்.

**04. மக்காச்சோள மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு: தீவனம் மற்றும் உணவுத் தொழில்துறையில் நிலை, கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புக்கள்**

**ஆர்.பி.விதானபத்திரன**

**நோக்கம்:** தீவன மற்றும் பல்வேறு உணவுத் துறைகளில் மக்காச்சோளத்தின் மதிப்புச் சங்கிலிகளின் உற்பத்தித்திறனையும் மற்றும் செயல்திறனையும் அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக மக்காச்சோளத்தின் மதிப்புச் சங்கிலிகளின் விரிவான பகுப்பாய்வை நடத்துதல்.

**முக்கிய முடிவுகள்**

1. இரசாயன உரங்களினதும் மற்றும் விவசாய இரசாயனங்களினதும் பற்றாக்குறை, பூச்சி சேதம் (சேனா கம்பளிப்பூச்சி), உற்பத்தி விலையின் ஏற்ற இறக்கம், வனவிலங்குகளால் ஏற்படும் சேதங்கள், காணிப் பிரச்சினைகள் மற்றும் அதிக விதை விலை ஆகியவை பிரதான கரிசனைகளை மத்தியில் விளங்கின.

2. மக்காச்சோளத்திற்கான அதிக விலை, நிதித் தடைகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் சேமிப்பு வசதிகள் கிடைக்காமை ஆகியவை வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களாகும், அதேவேளை, மக்காச்சோளத்தின் அதிக விலை, சீரற்ற விநியோகம், நிலையற்றதன்மையிலான விலை, மின்னின் ஆகுசெலவு மற்றும் இறக்குமதி

செய்யப்பட்ட இடுபொருட்களின் அதிக விலை ஆகியவை உணவு உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளாகும்.

3. விவசாயிகளின் நிகர வரம்பு 30% - 36% ஆக விருத்தியடைந்து 2019/20ஆம் ஆண்டின் பெரும் போகத்தின் வளர்ச்சியைப் (14-24%) பதிவு செய்கிறது.

**பரிந்துரைகள்**

1. தீவன உற்பத்தித்திறனுக்கான மக்காச்சோளத்தின் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய மக்காச்சோள மதிப்பு சங்கிலிகளின் உற்பத்தித்திறன் தூண்டப்பட வேண்டும்.. மதிப்புச் சங்கிலியின் வளர்ச்சிக்கு, வெவ்வேறு பயனுரித்தாளர்களிடையே நம்பிக்கையை வளர்க்கும் போது மதிப்புச் சங்கிலியின் பல்வேறு நிலைகளில் தலையீடு தேவைப்படுகிறது.

2. மக்காச்சோளத்தின் இறக்குமதித் தடையுடன், உள்ளூர் உற்பத்தியையும் மற்றும் அதன் உற்பத்தித்திறனையும் அதிகரிக்க வேண்டும். சிறு போக பயிர்ச்செய்கையின் அளவை அதிகரிப்பதும் மற்றும் பெரும் போகத்தின் உற்பத்தியை மேம்படுத்துவதும் முக்கியமானவையாகும். தரமான உள்ளீடுகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல் (கலப்பின விதைகள், உரம்); விவசாயிகளுக்கு கடன் வசதி வழங்குதல்; ஒப்பந்த அடிப்படையில் பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல்; உள்ளூர் மக்காச்சோளத்திற்கான விவசாய ஆராய்ச்சியில் அதிகளவு முதலீடு செய்தல் ஆகியன முக்கியமான நடவடிக்கைகளாகும்.

3. கோழித் தீவனத்திற்காக தரமான சோளத்தை உற்பத்தி செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தையும் மற்றும் பிற சேவைகளையும் வழங்குவது அவசியமாகும். மக்காச்சோளத்துக்கான முழுத் தேவையையும் உள்நாட்டில் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், மக்காச்சோளத்தை இந்த உற்பத்தியாளர்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கும் வகையில் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.



**05. ஒன்லைன் விற்பனை முறைகளைப் பயன்படுத்தும் இலங்கையின் நவீன மரக்கறி மதிப்புச் சங்கிலிகள்**




**ஜி.ஜி.டீ.எல்.டபிள்யூ.சமரசிங்க**

**நோக்கம்:** இலங்கையில் மரக்கறிச் சந்தைப்படுத்துதலுக்கான இ-சந்தைப்படுத்தல் முறைகளைப் பயன்படுத்துவதை ஆய்வு செய்தல்.

**முக்கிய முடிவுகள்**

1. தற்போது, மரக்கறிகளை வாங்குவதற்கு இ-சந்தைப்படுத்தல் முறைமைகளின் பயன்பாடு முதல்நிலை மட்டமொன்றில் உள்ளது.

2. மரக்கறிகளை வாங்குவதற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் இ-சந்தைப்படுத்தல் முறைகள் சிறப்பு நிலைமைகளின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளன.

3. இ-சந்தைப்படுத்தல் முறைகள் மூலம் உற்பத்தியாளர்கள் ஓர் உயர்வான விலையைப் பெற்றுள்ளனர்.

**பரிந்துரை**

1. நுகர்வோரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் பெறக்கட்டளையிடப்பட்ட பொருட்களை சரியாகவும், நேர காலத்திலும் மற்றும் சரியான அளவிலும் வழங்குதல். பாரம்பரிய சந்தைகளுக்கு மாறாக, குறைந்த விலையொன்றில் புத்தம்புதிய மரக்கறிகளை விநியோகிப்பதனால் இ-

சந்தைப்படுத்தல் மூலம் மரக்கறிகளை நுகர்வோர் வாங்குவதற்கு ஊக்குவிக்க முடியும்.



**06. உருளைக்கிழங்கு மதிப்புச் சங்கிலி: நிலை, சவால்கள் மற்றும் வாய்ப்புகள்**







**நோக்கம்:** உருளைக்கிழங்கு மதிப்பு சங்கிலிச் செயற்பாட்டாளர் களைக் கண்டறிதல், செயற்பாட்டாளர்களின் லாபம் மற்றும் சந்தைப்படுத்தல் வரம்பை மதிப்பிடுதல் மற்றும் துறையில் உள்ள தடைகளையும் மற்றும் வாய்ப்புகளையும் அடையாளங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

1. நியாயமானதொரு/மலிவானதொரு விலையில் உயர்தர விதைகள் கிடைக்காதது விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினையாகும்.

2. சந்தைப்படுத்தல் கட்டத்தில், விவசாயிகளுக்கு பேரம் பேசும் சக்தி இல்லாததால், பொருளாதார நிலையங்களில் உள்ள தரகுக்கூலி முகவர்கள் (commission agents) விலை சீராக்கல்காரர்களாகச் செயல்படுகின்றனர்.

3. இரசாயன உரம் இல்லாமை, அதிக சரீரஉழைப்பு ஆகுசெலவு, கருத்திட்டச் சேவையில் குறைபாடுகள், முறைமையான கடன்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்குடன் கடுமையான சந்தைப் போட்டி ஆகியவை விவசாயிகள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சனைகளாகும்.

### பரிந்துரைகள்

1. நியாயமான விலையொன்றில் தரமான விதைகளை விவசாயிகள் வாங்குவதை இயலச்செய்வதற்கு அரசு விதை உற்பத்தி செயல்முறையை வலுப்படுத்துதல்.

2. சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி செயல்முறைகள் ஆகியன மீது விவசாயிகளுக்கு அறிவூட்டுவதற்கு கருத்திட்டச் சேவையில் தேவையான மேம்பாடுகளைச் செய்தல்.

3. ஒத்துழைப்பிலான நடவடிக்கைகளுக்கு விவசாயிகளை ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் கடன் வசதிகளை அணுகுவதற்கும் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் மற்றும் அவர்களின் பேரம் பேசும் திறனை வலுப்படுத்துவதற்கும் அவர்களை இயலச்செய்தல்.

### 07. சோயா அவரையின் மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு

**என்.பி.ஜி.சமந்த**

**நோக்கம்:** சோயா அவரையின் மதிப்புச் சங்கிலி மூலம் சந்தை வாய்ப்புகளைப் புரிந்துகொள்வதற்கான பரந்த மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வொன்றை நடத்துதல்.

### முக்கிய முடிவுகள்

1. இலங்கைச் சூழலில், சோயா அவரையின் சந்தைப்படுத்தல் முறையானது பாசிப்பயறு அல்லது கௌபீ போன்ற ஏனைய வயல் பயிர்களிலிருந்து வேறுபடுகிறது. இது கிடைநிலை மட்டத்தில் சுயாதீனமாக இயங்கினாலும், சோயா அவரை மதிப்புச் சங்கிலியின் செயற்பாட்டாளர்களிடையே ஒரு வலுவான செங்குத்தான பிணைப்பு உள்ளது.

2. அனுராதபுரம் மாவட்டத்தில் மிகவும் பிரபலமான சோயா அவரை பயிர்ச்செய்கை முறை ஒரு முன்னோக்கிய ஒப்பந்த முறைமை ஆகும். அனைத்து உள்ளீடுகளும் சோயா அவரை பதப்படுத்தும் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.

3. சந்தையில் தரமான விதைகள் கிடைக்காமை, நடுகை மற்றும் அறுவடை ஆகிய மட்டங்களில் தொழில்நுட்ப

ஆதரவு இல்லாமை, பொருத்தமான இயந்திரங்கள் கிடைக்காததால் அதிக சரீரஉழைப்பு ஆகுசெலவுகள் ஆகியவை விவசாயிகளின் பிரதான சவால்களாகும்.

**பரிந்துரைகள்**

1. விதை பதப்படுத்தல் மற்றும் நடுகை ஆகிய மட்டங்களில் இயந்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், சோயா அவரை உற்பத்திச் செலவுகளைக் கணிசமாக்க குறைக்க முடியும்.

2. விதைகள் மற்றும் உரம் போன்ற தரமான உள்ளீடுகளைச் சரியான நேரத்தில் வழங்குவது அவசியமாகும்.

3. பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் வகைப்படுத்தப்பட்ட சோயா உணவுகளின் உற்பத்தி ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இருப்பினும், சோயா உணவுகளை விரிவுபடுத்தும் திறன் மற்றும் வாய்ப்பு ஆகியன உயர்வான மட்டமொன்றில் உள்ளன. எனவே, சோயா உணவு உட்கொள்ளலை ஊக்குவிப்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

## 08. தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் ஒப்பீட்டு அனுகூலம் மற்றும் ஏற்றுமதிப் போட்டித்திறன்

**இ.ஏ.சி.பிரியங்கர**

**நோக்கம்:** மிகவும் அனுகூலமான பழ வகைகள், முக்கிய போட்டியாளர்கள் மற்றும் ஒப்பீட்டு அனுகூலத்தைப் பாதிக்கும் காரணிகள் ஆகியவற்றை அடையாளங்காணுதல்.

**முக்கிய முடிவுகள்**

1. பப்பாசி மற்றும் அன்னாசிப்பழ ஏற்றுமதியில் இலங்கைக்கு உலகச் சந்தையில் அனுகூலம் உள்ளது.

2. பப்பாசி ஏற்றுமதியில் வளர்ச்சி அடைந்துள்ள போதிலும், அன்னாசி ஏற்றுமதியில் அது சரிவைச் சந்தித்து வருகிறது.

3. தொழிலாளர்-மூலதன விகிதம் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவை பப்பாசி மற்றும்

அன்னாசிப் பழங்களின் ஏற்றுமதியின் ஒப்பீட்டு நன்மைகளின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளன.

**பரிந்துரைகள்**

1. பப்பாசி மற்றும் அன்னாசி ஆகியனவற்றைப் பயிரிடுவதற்கு அதிக நிலத்தையும் மற்றும் மூலதனத்தையும் வழங்கி, இந்தப் பழங்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக இலங்கை அதிகளவு ஒப்பீட்டு நன்மைகளைக் கோர முடியும். இந்த முயற்சியில் தேசிய வரவு-செலவுத் திட்டக் கொள்கை மற்றும் அரசாங்கத்தின் நிதிக் கொள்கை ஆகியவை குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும்.




2. அன்னாசி தொடர்பான குறைந்து வரும் அனுகூலங்களை உயர்த்துவது மீது விசேட நோக்கொன்றுடன் மாற்றுச் சந்தைகளை மாற்றுதல்.

3. அன்னாசி மற்றும் பப்பாசி பயிர்ச்செய்கையில் அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும்.




**09. இலங்கையின் பாரிய பழங்களின் ஏற்றுமதிச் சாத்தியங்கள்: ஒரு பொருளாதாரப் பகுப்பாய்வு**

**ஏ.கே.ஏ.திஸாநாயக்க**

**நோக்கம்:** தற்போதைய பழ ஏற்றுமதியின் நிலைமையையும், செயல்திறனையும் மற்றும் சாத்தியக்கூறுகளையும் பகுப்பாய்தல் மற்றும் இலங்கையில் பழ ஏற்றுமதித் தொழிலின் முன்னேற்றத்திற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கு வசதியாக ஏற்றுமதியைப் பாதிக்கும் முக்கிய தடைகளையும் அடையாளங்காணுதல்.

**முன்னேற்றம்:** இந்த ஆய்வு தொடர்பான களப்பணி முடிவடைந்து, ஆராய்ச்சி அறிக்கை எழுதும் பணி நடந்து வருகிறது.



## விவசாய சந்தைப்படுத்தல் தகவல் முறைமை - AMIS

உணவுப் பொருட்களின் தகவல்களை (மொத்த விற்பனை, சில்லறை விற்பனை மற்றும் பண்ணை விலைகள்) சேகரிப்பதற்காக தினசரி உணவுப் பொருட்களின் தகவல்களைச் சேகரித்து விநியோகிப்பதை நோக்கிய ஒரு கருத்திட்டமே விவசாய சந்தைப்படுத்தல் தகவல் முறைமையாகும் (AMIS). இந்த முயற்சியின் மூலம் கொள்கை வகுப்பாளர்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் மகத்தான நன்மைகளைப் பெறுகிறார்கள் என்பதுடன், கருத்திட்டத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் வாழ்க்கைச் செலவையும் மற்றும் உணவுப் பாதுகாப்பையும் மீளவாயும் வாராந்தக் கூட்டங்களுக்கு எமது நிறுவனம் தொடர்ந்தும் சமர்ப்பித்து வருகிறது.

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், ஒன்பது சில்லறை விற்பனைக் கடைகள், புறக்கோட்டையில் உள்ள மொத்தச் சந்தை மற்றும் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து உட்கொள்ளும் முக்கிய மாவட்டங்களில் அமைந்துள்ள மேலும் 30 சந்தைகளில் இருந்து மொத்த மற்றும் சில்லறை விலை வகைகளின் கீழ் உணவுப் பொருட்களின் விலை மற்றும் சந்தைப்படுத்தல் தகவல்கள் ஆகியன பெறப்படுகின்றன என்பதுடன், இந்தத் தகவல்கள் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கைகள் மற்றும் விவசாய வணிகப் பிரிவின் முக்கிய வெளியீடுகளான "வாராந்த உணவுப் பண்டங்கள் மதிப்பாய்வு" மற்றும் "மாதாந்த உணவுப் பண்டங்கள் மதிப்பாய்வு" (மூன்று மொழிகளில் வெளியிடப்பட்டது) ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், பிரதான சந்தைகளில் இருந்து பெறப்படும் உணவுப் பொருட்களின் தினசரி மொத்த விலைகள் பற்றிய தகவல்கள் மொபிடெல் நடமாடும் வலைப்பின்னலான “6666 - Agri Price information index”அம்சத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. அத்தகைய தகவல்கள் எங்களால் உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டன. இதன் மூலம் உணவுப் பொருட்களின் விலைகளை அறிய விரும்பும் நுகர்வோர், மொபிடெல் தொலைபேசி இணைப்பு மூலம் 6666ஐச் சுழட்டுவதன் மூலம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் கிடைக்கும் ஊடாடும் குரல் பதிலுடன் (IVR) இணைக்க முடியும்.

கொள்கை உருவாக்குநர்களுக்கான சந்தைப்படுத்தல் தகவலைச் சமர்ப்பிப்பதே இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம்; இரண்டு பாரிய மட்டத்திலான பருவ இதழ்களை வெளியிடுதல்; சந்தைப்படுத்தல் தகவல் முறைமை மூலம் பயனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் பயனாளிகளின் வருவாயை அதிகரித்தல் மற்றும் விவசாயச் சந்தைப்படுத்தலில் ஈடுபடும் தரப்பினரிடையே சந்தைப்படுத்தல் தகவல்களை விநியோகிப்பது அவசியமாகக் கருதப்பட்டால், தற்போதைய விவசாயச் சந்தைப்படுத்தல் தகவல் சேவையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல். இந்தக் கருத்திட்டம் 1979 இல் தொடங்கப்பட்டது முதல் செயல்பாட்டில் உள்ளது. கருத்திட்டமானது திறைசேரியினால் நிதியளிக்கப்படுகிறது மற்றும் கொள்கை உருவாக்குபவர்கள், வர்த்தகர்கள், நுகர்வோர் மற்றும் தனியார் தொழில்முனைவோர் இந்தக் கருத்திட்டத்தின் பயனாளிகளாவர்.

2020 ஜனவரி முதல் ஓகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் 28 பகுதிகளில் இருந்து 28 வெளிக்கள உத்தியோகத்தர்களையும், கொழும்பு சந்தைக்கு மேலும் 11 சமயாசமய ஆய்வாளர்களையும் நியமிப்பதன் மூலம் ஏறக்குறைய அனைத்து சந்தைகளிலிருந்தும் விலை தகவல்களை எம்மால் சேகரிக்க முடியும். எவ்வாறாயினும், 28 சமயாசமய ஆய்வாளர்களில் 24 உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைந்ததினால் ராஜினாமா செய்தனர். கொவிட் - 19 தொற்றுநோயைத் தொடர்ந்து தோன்றிய பல தடைகள் இருந்தபோதிலும், 2020 ஒக்டோபரில் 12 சமயாசமய ஆய்வாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். மேலதிகமாக, மொபிடெல் அழைப்பாளர் சேவையின் "6666 - Agri Price index" அம்சமும தற்போது ஏழு பொருளாதார நிலையங்களில் இருந்து மொத்த விலைத் தகவல்களை வழங்கும்.

# பயிற்சிக்

## 01. விவசாய வணிகக் கருத்துருவினதும் மற்றும் சந்தை விரிவாக்கத்தினதும் பயன்பாடு மீதான செயலமர்வு

### டபிள்யூ.எச்.ஏ.ஷாந்த

**நோக்கம்:** விவசாய மதிப்புச் சங்கிலிகளினதும் மற்றும் மானிய விவசாயத்தின் சந்தைப்படுத்தல் துறைகளினதும் மீதான விசேட நோக்குடன் இலங்கையின் விவசாய வணிகக் கருத்துகள் பற்றிய அனுபவத்தைச் சேகரிப்பதற்கு விவசாய இளங்கலைப் பட்டதாரிகளை இயல்செய்தல்.

2021நவம்பர் 28 முதல் டிசம்பர் 01 வரை HARTIஇல் நடைபெற்ற இந்த நான்கு நாள் பயிற்சியில் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்ட முகாமைத்துவப் பீடத்தின் விவசாய-வணிக முகாமைத்துவத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 30 பேர் கலந்துகொண்டனர்.

### இலக்குபடுத்தப்பட்ட முடிவுகள்

1. நிறுவனத்தின் "விவசாய சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் முறைமை" மீது நடைமுறை அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பங்கேற்பாளர்களுக்கு கைமாற்றுதல்.

2. விசேடமாக, உணவுப் பயிர்கள் மற்றும் விவசாய வணிகங்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பாக, HARTIஇன் ஆராய்ச்சி தொடர்பான அனுபவத்தைப் பங்கேற்பாளர்களுடன் பகிர்தல்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாய மதிப்புச் சங்கிலிகளில் முக்கிய பயனுரித்தாளர்களுடனும் மற்றும் இடைத்தரகர்களுடனும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும் ஒரு தளத்தை உருவாக்குதல்.

### பயிற்சியாளர் குழாம்

ஷாந்த ஹேவகே, சிதத் பண்டார, மாலிந்த செனவிரத்ன, கலாநிதி சமந்த பள்ளியகுரு, கீதானி சமரசிங்க, கலாநிதி சமித் பிரியங்கர, திலானி பத்மஜானி, நாலக விஜேசூரிய, கலாநிதி அசங்க விஜேசிங்க, சுபாஷினி அபேசிங்க, லால் ஹெட்டிகே, காமினி ஹதுங்கே.

## 02 சமூக அணிதிரட்டல் மீது பயிற்சித் திட்டம்

**நோக்கம்:** சமூக அணிதிரட்டலின் முக்கிய கருத்துருக்கள் பற்றிய தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குதல்.

இந்த நான்கு நாள் திட்டமானது கேகாலை பிரதேச்ச செயலகத்துடன் இணைந்த 35 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக 2021 ஒக்டோபர் 26 முதல் 29 வரை கேகாலை சனச பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.

### இலக்குபடுத்தப்பட்ட முடிவுகள்




1. செய்திட்ட திட்டமிடல் முதல் கருத்திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல் வரை சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் விழிப்புணரவை உருவாக்குதல்.

2. அபிவிருத்திச் செய்திட்டங்களில் சனசமூகங்களின் வளங்களை உச்சமாக்கும் திறன்களை மேம்படுத்துதல்.

3. சனசமூகப் பங்கேற்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன மீதான அடிப்படையில் சனசமூக செயல் திட்டங்களை வகுத்தமைத்தல்.

### பயிற்சியாளர் குழாம்

எஸ்.ஏ.எம். சமரக்கோன், எம்.எஸ்.டி..லூர்து, பி .எஸ்.டி.ஏ. பமுனுஆரச்சி, எச்.சி.ஜே..ஜயசூரிய, ரிபானா புஹாரி, சங்கீத் பெர்னாண்டோ

## 03. கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைத் (PRA) திட்டமிடுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் பங்கேற்பு நுட்பங்களின் பிரயோகம்

### எச்.ஜே.சி.ஜயசூரிய

**நோக்கம்:** சமூகப் பங்கேற்பின் மூலம் கிராமிய முன்னேற்றத்திற்கான சனசமூக செயல் திட்டங்களை வகுப்பதில் முக்கிய கருத்துருக்களினதும் மற்றும் வழிமுறைகளினதும் தத்துவார்த்த, நடைமுறையிலான அறிவு மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

நுவரெலியா, புத்தளம் மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் திட்டமிடல் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள 103 உதவி திட்டமிடல் பணிப்பாளர்களை இலக்காகக் கொண்ட மூன்று ஐந்து நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் நவம்பர் முதல் டிசம்பர் 2021 வரை நடைபெற்றன.

### இலக்குபடுத்தப்பட்ட முடிவுகள்

1. சனசமூகப் பங்கேற்பு முறையைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர்களையும் கொண்ட முன்னோடி குழுவொன்றை உருவாக்குதல்.

### பயிற்சியாளர் குழாம்

எஸ்.எம்.ஏ.சமரகோன், பி.சி.ஜே.டீ சில்வா, எச்.ஜே.சி.ஜயசூரிய, சங்கீத் பெர்னாண்டோ, ஆர்.எல்.என்.ஜயதிஸ்ஸ

## 04 கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்த பெண் விவசாயி தொழில்முனைவோரை வலுப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம்

**நோக்கம்:** பெண்களின் உகந்த திறன்களைப் பயன்படுத்தி உள்நாட்டு அளவில் வருமானம் ஈட்டவும், வறுமை ஒழிப்பில் பங்களிக்கவும் பெண்களின் அறிவு, மனோபாவம் மற்றும் திறன்கள் ஆகியவற்றை மேம்படுத்தல்.

இரத்தினபுரி மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உட்பட்ட விவசாய சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 518 பெண் தொழில்முனைவோருக்கு 10 அமர்வுகளாக நடைபெற்ற ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகளில் பயிற்சியளிக்கப்பட்டது.

## இலக்குபடுத்தப்பட்ட முடிவுகள்

1. ஒரு பெண்ணாக தன்னை வலுப்படுத்துவதற்கான வழிகளையும் மற்றும் வழிமுறைகளையும் உணர்தல்.

2. குடும்பத்தின் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றில் பெண்களின் வகிபங்கை அடையாளங்காணுதல்.

3. ஊட்டச்சத்துடனான உணவுடன் பொதிப்படுத்தப்பட்ட வீட்டுத் தோட்டம் மூலம் குடித்தனத்தில் வளமான தொழில்முனைவோராக எவ்வாறு செயல்படுவது என்பதை அடையாளங்காணுதல்.

## பயிற்சியாளர் குழாம்

எஸ்.எம்.ஏ.சமரகோன், பி.சி.ஜே.டீ சில்வா, எச்.ஜே.சி.ஜயசூரிய, எச்.பி.முனசிங்க, யூ.டபிள்யூ.பி.ஆர்.ரணதுங்க

## தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவு (ICD)

புள்ளிவிபர மற்றும் தரவு படிநிலைப்படுத்தல்/வெளியீடுகள்/ நூலகம் ஆகியவற்றின் அலகுகளை ICD பிரிவு கொண்டுள்ளது. ஆராய்ச்சி அறிக்கைகள், பருவகால இதழ்கள், சஞ்சிகைகள், செய்திமடல்கள், மதிப்புரைகள், கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிற வெளியீடுகள் ஆகியன மூன்று மொழிகளிலும்

## 2021இல் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகள்



OFCs IN THE INTERMEDIATE SEASON
Cultivation issues in selected districts



DO WE KNOW WHAT WE SHOULD BE EATING?
Consumption Patterns of Fruit and Vegetables



IMPACT OF HOME GARDEN COCONUT CULTIVATION ON COCONUT KERNEL BASED INDUSTRIES IN SRI LANKA



POLICIES THAT MATTER OR ARE FORGETTABLE
An evaluation of paddy policies in Sri Lanka: 1998 to 2018



THATTUMARU - KATTIMARU AND PRODUCTIVITY
An Assessment of Traditional Tenurial Systems in The Wet Zone



IT IS NOT JUST WATER THAT FLOWS DOWNSTREAM
Water Management in the Eastern Slopes of the Central Highlands



LAND DEVELOPMENT ORDINANCE IN ACTION
Achievements and Prospects of Highland Alienation



MINOR IRRIGATION REHABILITATION
An Assessment of Awarding Rehabilitation Contracts to Farmer Organizations



MOBILE BASED SOLUTION FOR PEST AND DISEASE MANAGEMENT IN PADDY CULTIVATION



FACTORS INFLUENCING VEGETABLE FARMER'S DECISIONS



VALUE CHAIN ANALYSIS OF THE MILK INDUSTRY IN SRI LANKA



TRANSACTION COSTS: POTATO AND RED ONION



- OFC CULTIVATION IN THE NORTHERN PROVINCE: SSUES AND POSSIBLE SOLUTIONS
- CROP PRODUCTION PRACTICES IN VILLAGE TANK SYSTEMS IN DRY ZONE SRI LANKA
- ශ්‍රී ලංකාවේ කුළුබඩු කර්මාන්තයේ සමාජ - ආර්ථික ස්වභාවය සහ වර්තමානයේ එම කර්මාන්තය මුහුණ දී ඇති ගැටලු සහ විසඳුම් :












### பருவகால வெளியீடுகள்

### அனுசரணையாளர்களின் கோரிக்கையின் மீது








| [illegible] | [illegible] |
|---|---|
| 2010 | 1,032,485 |
| 2011 | 859,660 |
| 2012 | 744,018 |
| 2013 | 587,139 |
| 2014 | 759,897 |
| 2015 | 884,317 |
| 2016 | 498,041 |
| 2017 | 400,116 |
| 2018 | 832,123 |
| 2019 | 706,616 |
| 2020 | 891,325 |

| [illegible] | [illegible] | [illegible] | N.P.K [illegible] |
|---|---|---|---|
| 2010 | 1,032,485 | 187,425 | 6,1 |
| 2011 | 859,660 | 213,075 | 6,8 |
| 2012 | 744,018 | 245,742 | 4,8 |
| 2013 | 587,140 | 348,838 | 17,9 |
| 2014 | 759,897 | 296,206 | 7,6 |
| 2015 | 884,317 | 357,937 | 9,5 |
| 2016 | 498,041 | 412,738 | 14,6 |
| 2017 | 400,117 | 258,833 | 12,0 |
| 2018 | 832,124 | 366,697 | 18,7 |
| 2019 | 706,617 | 154,458 | 15,3 |
| 2020 | 891,326 | 324,472 | 50,0 |



## "கொவிமின" நாளிதழ் மற்றும்




கொவிமின மாதாந்த இதழ், HARTIஇன் பொது வெளியீடுகளின் பட்டியலில் பிந்திய சேர்க்கையாகும். இது விவசாயம் மற்றும் கமநலத் துறைகள் தொடர்பான தற்போதைய செய்திகளையும் மற்றும் விடயங்களையும் கொண்டுள்ளது. இது கமநல சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்படும் இலவச வெளியீடு ஆகும்.

### சமூக ஊடகங்கள்




தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும், தற்போதைய விவசாயம் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இருந்து வெளிப்படும் சாத்தியமான கொள்கை சார்ந்த தீர்வுகளுக்கும் ஊடாடும் இடத்தையும் பொதுவான தளத்தையும் சமூக ஊடகங்கள் வழங்குகின்றன. ஒரு பிரத்தியேக YouTube அலைவரிசை மற்றும் Facebook, Twitter மற்றும் Instagram கணக்குகள் அமைக்கப்பட்டு, HARTI ஆராய்ச்சி, களம் தொடர்பான மாகநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சி திட்டங்கள் மற்றும் பிற சேவைகள் ஆகியன பற்றிய தகவல்களைப் பகிர்வதற்காகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

### நூலகம்




நிறுவகத்தின் பணியாளர்களினதும் மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினரினதும் விவசாயத் தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விவசாயத் தகவல்களைச் சேகரித்து பதிவு செய்வதே இந்நூலகத்தின் முக்கிய நோக்கமாகும்.

### நிறுவன வெளியீடுகளின் டிஜிட்டல்மயமாக்கல்

இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய டிஜிட்டல்மயமாக்கல் திட்டத்தின் கீழ், நிறுவகத்தின் வெளியிடப்பட்ட உள்ளடக்கங்களை சிரமமின்றி அணுகுவதற்கு எங்கள் நிறுவகத்தின் அறிவார்ந்த இலக்கியங்கள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளின் இலத்திரனியல் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. இணைப்பு: http://nsf.ac.lk.

## இலத்திரனியல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகங்களின் பங்களிப்பு


දේශීය කෘෂිකර්මයේ සුරක්ෂිතභාවය උදෙසා කාලගුණ වගා රක්ෂණයේ කාර්යභාරය


කොස්
පුවලිත කිරීමේ වැදගත්කම


කොස් බෝගය
ප්‍රචලිත කිරීමේ වැදගත්කම




එනසාල් වගාව


දැනගෙන වගා කරමු
ටොම් ඊජේසී අඹ සල්ලි මවනවාද?


මොණරාගල දිස්ත්‍රික්කයේ රතුළූනු නිෂ්පාදනයේ ගැටලු සහ වැඩි දියුණු කිරීම්


නිල්ගල ඖෂධ වනය අනතුරේ

## தொலைக்காட்சி

## அறிவார்ந்த சஞ்சிகைகள்



















## வெளிப்புறக்

## ஆராய்ச்சிக் கூட்டாண்மைகள்

## ஆராய்ச்சிக்

### உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆகியவற்றின் முந்தைய கூட்டுமுயற்சியின்படி, "இலங்கையில் அனுராதபுர மாவட்டத்தில் அரிசி உற்பத்தியில் மேம்படுத்தப்பட்ட கருத்திட்ட சேவைகளின் தாக்கம் மீது சான்றினைக் கட்டியெழுப்புதல்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

“சேமி அத்துடன் வளர்” என்ற கருத்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த ஆய்வானது, அக்டோபர் 2018 மற்றும் பெப்ரவரி 202இல் மாவட்டத்தில் உள்ள 110 விவசாய சங்கங்களின் 1100 நெல் விவசாயிகளிடம் உள்நாட்டு கணக்கெடுப்பை நடத்தியது. இந்தத் தரவுத்தளம் தற்போதைய திட்டத்தின் அடித்தளமாக பயன்படுத்தப்படுகிறது. 2019இல் செயல்படுத்தப்பட்ட இரண்டாம் கட்டமானது 1100 குடும்பங்களை உள்ளடக்கிய ஒரு கணக்கெடுப்பின் மூலம் பல்வேறு உர மானியங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்யும். இந்த கணக்கெடுப்பு முந்தைய "வளங்களைச் சேமித்து வளர்த்தல், பயிர்ச்செய்கையைப் பாதுகாத்தல்" கருத்திட்டமாக மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. தேசிய உரக் கொள்கையின் மீளவாய்தலின் காரணமாக, உர மானியத்தைச் செயல்படுத்தும் இரண்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவும், குழு தரவு பொருளாதார அளவீட்டு முறைகளைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### வேர்ல்ட் விஷன் லங்கா

“இலங்கையின் உலர் வலயத்தில் ஊறுபடத்தக்க குழுக்களின் காலநிலை மாற்றியமைக்கப்பட்ட விவசாய நடைமுறைகள் மற்றும் காலநிலை தழுவல்” என்ற ஆய்வுக்காக வேர்ல்ட் விஷன் லங்கா ஆராய்ச்சி நிதியாக வழங்கிய ரூ. 11 மில்லியனை HARTI பெற்றுக்கொண்டது. காலநிலை மாற்றத்தால் அதிக பாதிப்புக்குள்ளாகும் உலர் வலயத்தில் பெண்களினதும் மற்றும் குழந்தைகளினதும் சகிப்புத்தன்மையை அதிகரிப்பதில் காலநிலை தகவமைப்பு பயிர்ச்செய்கை நடைமுறைகளையும் மற்றும் அவர்களின்

பங்களிப்பையும் அவதானிப்பதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

இரு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் கள நடவடிக்கைகள் செப்ரெம்பர் 2023 வரை திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்ணுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் காலநிலை மாற்றத்தின் நேரடி மற்றும் மறைமுக பாதிப்புகள் பற்றிய ஆரம்ப அறிக்கை 2021இல் தயாரிக்கப்பட்டது.

**பயிற்சிக் கூட்டாண்மைகள்**

பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்ட விவசாயத் தொழில் முயற்சியாளர்களுக்கு விவசாய வியாபார முகாமைத்துவத்தில் சந்தைத் தகவல்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இரண்டு நாள் பயிற்சியொன்று நிறுவகத்தின் சந்தைப்படுத்தல், உணவுக் கொள்கைகள் மற்றும் விவசாய-வணிக பிரிவினால் பதுளை கெப்பிட்டல் சிட்டி ஹொட்டேலில் நடத்தப்பட்டது.

சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி இ.எ.சி. பிரியங்கர, மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களான திரு. பிரசன்ன விஜேசிங்க மற்றும் விராஜித் குருப்பு ஆகியோர் வளவாளர்களாக இருந்தனர்

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

அதன் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இலக்குகளை மேலும் மேற்கொள்வதற்காக, விவசாய பீடங்களைக் கொண்ட அனைத்து உள்ளூர் பல்கலைக்கழகங்களுடனும் பல ஆராய்ச்சி மற்றும் கல்விசார் கூட்டாண்மைகளில் HARTI பிரவேசித்தது.

ஆளுனர் குழுவின் ஒப்புதலுடன், எட்டு அரசாங்கப் பல்கலைக்கழகங்களுடனும் மற்றும் சனச பல்கலைக்கழகத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் HARTI கைச்சாத்திட்டது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் டிசம்பரில் கைச்சாத்திடப்படும்.

## பணியாளர் பயிற்சி மற்றும் திறன் முன்னேற்றம்

### 31 டிசம்பர் 2021இல் ஊழியர்கோப்பின் நிலை

| | 31.12.2020இல் உள்ளவாறு நிலை | ஆண்டின் போது பதவிவிலக்கல், ராஜினாமா | நியமனங்கள் | 31.12.2021இல் உள்ளவாறு நிலை |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 1 | - | - | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் | - | - | - | - |
| பிரிவுகளின் தலைவர்கள் | 6 | - | - | 6 |
| ஆராய்ச்சிப் பணியாளர் | 30 | 1 | - | 28 |
| நிருவாகப் பணியாளர் | 9 | - | - | 9 |
| நூலகத்தின் சிரேஷ்ட பணியாளர் | 2 | - | - | 2 |
| தரவுகள் அபிவிருத்தி வங்கி | 2 | 1 | - | 1 |
| கணனி அலகு | 1 | - | - | |
| வெளியீட்டு அலகு | 5 | - | - | 4 |
| புள்ளிவிபரப் பணியாளர் | 21 | 6 | - | 15 |
| தொழில்நுட்பப் பணியாளர் | 2 | - | 4 | 6 |
| எழுதுநர், செயலக மற்றும் இணையான தரங்கள் | 45 | 1 | - | 44 |
| இயக்கச்செயற்பாட்டு மற்றும் இணைந்த தரங்கள் | 45 | 2 | - | 43 |
| மொத்தம் | 109 | 11 | 4 | 159 |

## பணியாளர்களின் பயிற்சி

இந்த ஆண்டில் நடத்தப்பட்ட ஏராளமான பணியாளர் பயிற்சி நிகழ்ச்சிகள் ஒன்லைனில் நடத்தப்பட்டன . பயிற்சித் திட்டங்கள், உள் மற்றும் வெளிப்புறமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, மேலும் HARTI பணியாளர்களை இலக்காகக் கொண்டுள்ளன.

## வெளி நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

| பயிற்சித் திட்டங்கள் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | கால அளவு |
|---|---|---|
| 1. கிராம ஆட்சியின் சூழலில் கிராமத்தின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஒரு கருவியாக கிராமத்தை டிஜிட்டல் மயமாக்குதல். | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (01) | 01 நாள் |
| 2. ஆராய்ச்சி யோசனைகளை உருவாக்குவதற்கான ஒன்லைன் திட்டம் | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (05) | 01 நாள் |
| 3. கார்பன் தடயத்தின் தகுதிக்கான ஆலோசனை மேம்பாடு | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (01) | 05 நாட்கள் |
| 4. விவசாயக் கொள்கையின் பகுப்பாய்வு | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (01) | 01 மாதம் |
| 5. அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ மற்றும் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் மதிப்பு கூட்டுதலில் நவீன முன்னேற்றங்கள் | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (01) | 01 நாள் |
| 6. "உங்கள் தொழிலில் வெற்றி பெறுவது எப்படி?" என்ற கருப்பொருளின் கீழ் ஒன்லைன் திட்டம் | ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் (01) | 01 நாள் |
| 7. பங்குகளின் வருடாந்திர சரிபார்ப்பு | கணக்காளர் (01) | 03 நாட்கள் |
| 8. திறன் மேம்பாடு | நிருவாக உத்தியோகத்தர் (01) | 03 நாட்கள் |
| 9. அலுவலக முகாமைத்துவ மற்றும் நிதி ஒழுங்குமுறை | முகாமைத்துவ உதவியாளர் (01) | 02 நாட்கள் |

## ஊழியர்களுக்கு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

01. ஜூம் குறித்த முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பின்வருபவை நடத்தப்பட்டன.

நாட்கள் 02 வங்கி சமரச அறிக்கை குறித்த பயிற்சித் திட்டம் 1.1

நாள் 01 அறிமுகம் "இரட்டை உள்ளீடுகள்" கணக்கியலில் 1.2

1.3 கொள்முதல் நடைமுறையின் ஆரம்ப அறிமுகம் நாள் 01

.02புள்ளிவிபரப் பணியாளர்களுக்கான "SATA" தொகுப்பின் பயிற்சித் திட்டம்.

## 15. நிலைத்திருத்தல் முன்னேற்ற குறிக்கோள்களை ச் சாதிப்பதற்கான செயல்திறன் (SDG)

| நிலைத்திருத்தல் முன்னேற்ற இலக்கு | இலக்கு | **சாதனைக்கான குறியீடுகள்** | **இது வரையிலான சாதனைகளின் முன்னேற்றம்** | | |
|---|---|---|---|---|---|
| | | | **0% - 49%** | **50%- 74%** | **75%- 100%** |
| **01. பூஜ்ஜிய வறுமை, எல்லா இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் பசியை முடிவுக்குக் கொண்டுவருகிறது** | தட்டுமாறு - கட்டிமாறு மற்றும் உற்பத்தித்திறன் : ஈர வலயத்தில் பாரம்பரிய காலமுறை அமைப்புகளின் ஒரு மதிப்பீடு. | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | உள்ளூர் விவசாய தொழில்முனைவோரால் நடத்தப்படும் நிலையங்களை வழங்கும் விவசாய சேவை மூலம் பண்ணை இயந்திரமயமாக்கலைத் தொடங்குதல் : சவால்கள் மற்றும் வாய்ப்புகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் பெறுமதியான பழப் பயிர் உற்பத்தியில் நீர் மற்றும் சக்தி நுகர்வுக்கான ஒருங்கிணைந்த தீர்வுகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | முக்கியமான அல்லது மறக்கக்கூடிய கொள்கைகள்இலங்கையில் நெல் : கொள்கைகளின் மதிப்பீடு1998 முதல் 2018 வரை | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையின் பால் தொழில்துறையின் மதிப்பு சங்கிலிப் பகுப்பாய்வு | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் வாசனைத்திரவிய தொழில்துறையின் சமூகபொருளாதார நிலை - மற்றும் தொழில்துறையின் சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவு: உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | வட மாகாணத்தில் OFC பயிர்ச்செய்கை : பிரச்சினைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கையில் 2006 பாற்பண்ணை முன்னேற்றக் கொள்கையின் மதிப்பீடு | இடைக்கிடையிலான வெளியீடு | | ✓ | |
| | உருளைக்கிழங்கு மதிப்பு சங்கிலிநிலை : சவால்கள் மற்றும் வாய்ப்புகள் | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |
| | செயல்பாட்டில் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் (LDO) மேட்டுநில உரிமை மாற்றத்தின் சாதனைகள் மற்றும் வாய்ப்புவளங்கள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | சிறு நீர்ப்பாசன புனரமைப்பு (MIR): விவசாயிகள் அமைப்புகளுக்கு (FOs) புனரமைப்பு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான ஒரு மதிப்பீடு | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையின் தேசியரீதியில் முக்கியமான விவசாய பாரம்பரிய முறைமைகள் (NIAHS): அங்கீகாரம் மற்றும் பேணல் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | திட்ட முகாமைத்துவம் : விவசாயத் திணைக்களத்தினாலும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் அபிவிருத்தி திட்டங்களை/கருத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் உணவுப் பயிர் துறையில் விவசாய விரிவாக்கம் மற்றும் ஆலோசனை சேவை : சவால்கள், சிக்கல்கள் மற்றும் விருப்பத்தேர்வுகள் | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | இளைஞர் பங்கேற்பினதும் மற்றும் சேதன நெல் பயிர்ச்செய்கையினதும் மூலம் தீவிரமான நெல் காணி பயன்பாட்டைத் துரிதப்படுத்துதல் | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | கைவிடப்பட்ட நெற்பயிர் காணிகளில் மீண்டும் விவசாயம் செய்யும் முயற்சிகளின் வெற்றி | இடைக்கிடையிலான வெளியீடு | | ✓ | |
| | உள்ளூர் விவசாய தொழில்முனைவோரால் நடத்தப்படும் நிலையங்களை வழங்கும் விவசாய | பருவகால அறிக்கை | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **02. உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்** | சேவை மூலம் பண்ணை இயந்திரமயமாக்கலைத் தொடங்குதல்சவால்கள் மற்றும் வாய்ப்புகள் : | | | | |
| | காணி சீர்திருத்தங்கள் மற்றும் நில ஒருங்கிணைப்பு: நிலையான கிராமிய முன்னேற்றத்தை நோக்கி | இடைக்கிடை யிலான வெளியீடு | | ✓ | |
| | இலங்கையின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வருமானத்தை வலுப்படுத்துவதற்காக பண்ணை தொழில் முனைவோர் மற்றும் விவசாய வணிக மேம்பாட்டின் ஊடாக காளான் தொழிலை ஊக்குவித்தல் | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |
| | கீழ்நோக்கி பாய்வது வெறும் நீர் அல்லமத்திய : மலைநாட்டின் கிழக்கு சரிவுகளில் நீர் முகாமைத்துவம் | தொழிற்படு அறிக்கை | | | ✓ |
| | தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இடைநிலைப் பருவ பயிர்ச்செய்கை சிக்கல்களில் OFCகள் | தொழிற்படு அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் பெறுமதியான பழப் பயிர் உற்பத்தியில் நீர் மற்றும் சக்தி நுகர்வுக்கான ஒருங்கிணைந்த தீர்வுகள் | இடைக்கிடை யிலான வெளியீடு | | ✓ | |
| | சேதன உர உற்பத்தியின் வணிகமயமாக்கல்: சிக்கல்கள் மற்றும் வாய்ப்புவளங்கள் | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |
| | "நாம் என்ன சாப்பிட வேண்டும் என்று எங்களுக்குத் தெரியுமா?" பழங்களினதும் மற்றும் மரக்கறிகளினதும் நுகர்வு முறைகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | நெல் பயிர்ச்செய்கையில் பூச்சி மற்றும் நோய் முகாமைத்துவக்கான நடமாடும் அடிப்படையிலான தீர்வு | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | மரக்கறி விவசாயிகளின் முடிவுகளில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கை, பொலன்னறுவையில் உள்ள அரிசி பெறுமதிச் சங்கிலி | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **02. உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்** | இலங்கையில் தெங்கு பருப்பு சார்ந்த தொழில்துறைகளில் வீட்டுத் தோட்ட தெங்கு செய்கையின் தாக்கம் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் வாசனைத்திரவிய தொழில்துறையின் சமூகபொருளாதார நிலை - மற்றும் தொழில்துறையின் சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | உருளைக்கிழங்கு மதிப்பு சங்கிலிநிலை : சவால்கள் மற்றும் வாய்ப்புகள் | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |
| | இலங்கையில் மிளகாயின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போக்குகள் | இடைக்கிடையிலான வெளியீடு | | ✓ | |
| | இலங்கையில் பெரிய வெங்காயத்தின் ஒரு மதிப்பு சங்கிலி பகுப்பாய்வு | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | மக்காச்சோள மதிப்பு சங்கிலிப் பகுப்பாய்வு : தீவனம் மற்றும் உணவுதொழில்துறையில் நிலை, கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புகள். | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | ஒன்லைன் விற்பனை முறைகளைப் பயன்படுத்தும் இலங்கையின் நவீன மரக்கறி மதிப்புச் சங்கிலிகள் | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | சோயா அவரையின் மதிப்புச் சங்கிலிப் பகுப்பாய்வு | தொழிற்படு அறிக்கை | | ✓ | |
| | தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பொருட்களின் ஒப்பீட்டு அனுகூலம் மற்றும் ஏற்றுமதி போட்டித்திறன் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | இலங்கையின் பாரிய பழங்களின் ஏற்றுமதி சாத்தியங்கள்ஒரு பொருளாதார பகுப்பாய்வு : | ஆராய்ச்சி அறிக்கை | | | |
| | கீழ்நோக்கி பாய்வது வெறும் நீர் அல்லமத்திய : மலைநாட்டின் கிழக்கு சரிவுகளில் நீர் முகாமைத்துவம் | தொழிற்படு அறிக்கை | | | ✓ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அனைவருக்கும் நீரினதும் மற்றும் சுகாதாரத்தினதும் இருப்பு மற்றும் நிலையான மேலாண்மையை உறுதி செய்தல்** | | | | | |
| **நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலையானதாக செய்தல்** | செயல்பாட்டில் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் (LDO): மேட்டுநில உரிமை மாற்றத்தின் சாதனைகள் மற்றும் வாய்ப்புவளங்கள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| **நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்** | உலர் வலயத்தில் உள்ள கிராமிய குள அமைப்புகளில் பயிர் உற்பத்தி நடைமுறைகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | மத்திய மலைப்பகுதியின் கிழக்கு சரிவுகளின் நீர் முகாமைத்தும் மீதான ஆய்வு | தொழிற்படு அறிக்கை | | | ✓ |
| **காலநிலை மாற்றத்தையும் மற்றும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போராடுவதற்கான அவசர நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கிறது** | இலங்கை உலர் வலயத்தில் உள்ள கிராம குள முறைமைகளில் பயிர் உற்பத்தி நடைமுறைகள் | ஆராய்ச்சி அறிக்கை | | | ✓ |
| | மத்திய மலைப்பகுதியின் கிழக்கு சரிவுகளின் நீர் முகாமைத்தும் மீதான ஆய்வு | தொழிற்படு அறிக்கை | | | ✓ |
| | இலங்கையில் மலையக மரக்கறி விவசாயத்தில் பயன்படுத்தப்படும் மண் பேணல் நடைமுறைகளை நிர்ணயிக்கும் காரணிகள் | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்** | இலங்கையின் பாரிய பழங்களின் ஏற்றுமதி சாத்தியங்கள்ஒரு பொருளாதார பகுப்பாய்வு : | ஆராய்ச்சி அறிக்கை | | ✓ | |
| | விவசாய வணிகக் கருத்துருவினதும் மற்றும் சந்தை விரிவாக்கத்தினதும் பயன்பாடு மீதான செயலமர்வு | பயிற்சி செய்திட்டங்கள் | | | ✓ |
| | கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை (PRA) திட்டமிடுவதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் பங்கேற்பு நுட்பங்களிஜன் பிரயோகம் | பயிற்சி செய்திட்டங்கள் | | | ✓ |
| | கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்த பெண் விவசாயி தொழில்முனைவோரை வலுப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் | பயிற்சி செய்திட்ட ங்கள் | | | ✓ |
| | சமூக அணிதிரட்டல் மீது பயிற்சித் திட்டம் | பயிற்சி செய்திட்டங்கள் | | | ✓ |

## முன்னோக்கி

### ஆராய்ச்சி பிரிவுகளின் மறுசீரமைப்பு

2021ஆம் ஆண்டில் எட்டப்பட்ட சிறப்பான முன்னேற்றத்துடன், HARTI உயர்ந்த எதிர்பார்ப்புகளுடன் முன்னேறி வருகிறது . 2021ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், நிறுவகத்தின் ஆணையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கான வலிமையையும் புதிய திசையையும் வழங்கும் ஆதாரமாக உருவாகியுள்ளது .உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல சவால்களுக்கு மத்தியில் மாறிவரும் முன்னோக்குகளுடன் நிறுவகத்தை மாற்றியமைப்பது, அதே நேரத்தில் நிறுவக இலக்குகளுடன் இணைந்திருப்பது, இன்றைய உலகின் ஆராய்ச்சி கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முக்கியமானது மற்றும் முக்கியமானதாகும்.

அந்தவகையில், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் மேற்கூறிய அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் வகையில் மறுசீரமைக்கப்படுகிறது . அதன்படி, ஆராய்ச்சி நிறுவகத்தின் முக்கிய பரிமாணம் -- உணவு, சுற்றுச்சூழல் மற்றும் கிராமி மேம்பாடு ஆகிய துறைகளின் கீழ் அதிக மனித வளங்களை இணைப்பதன் மூலம் பலப்படுத்தப்படும் . அடையும் பன்முகத் துறைகள், பகுப்பாய்வுத் துல்லியம், காலக்கெடு மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலின் கொள்கைப் பொருத்தம் மற்றும் நிறுவனத்தின் ஆராய்ச்சி வெளியீடு ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு முதன்மை கவனம் செலுத்தப்படும்.

தரவு முகாமைத்துவ பிரிவு தரவு மற்றும் தகவல் பகுப்பாய்வு மூலம் அதன் ஆதரவை வழங்கும் 50 .வருட கால வரலாற்றில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் தரவு முகாமைத்துவப் பிரிவானது அரச, தனியார் மற்றும் பங்குதாரர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உயர்தர தரவுகளை வழங்குவதற்கு உடனடியாகக் கிடைக்கிறது .பயனுரித்தாளர்களுக்கு அறிவைப் பரப்புவதில், தகவல் மற்றும் தொடர்புப் பிரிவு முக்கியப் பங்காற்றுகிறதுகல்வி . ம .மற்றும் பணிப்பாளர் திரு மாலிந்த செனவிரத்ன மற்றும் பிரிவுகளின் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அதன் நோக்கத்தை விரிவுபடுத்துவதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான சமூகங்களுக்கு பயிற்சிப் பிரிவு சேவை செய்யத் தயாராக உள்ளது.

இந்தப் பின்னணியில், நிறுவகத்தின் இலக்குகளை அதாவது பொதுவாக சமூக-பொருளாதார இலக்குகளை அடைய, வரவிருக்கும் ஆண்டு மற்றும் அதற்குப் பிறகு அதிக உற்பத்தி மற்றும் திறமையான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பாக மாறுவதற்கு.பயிற்சி, கல்வி, தரவு மற்றும் தகவல் தொடர்பு போன்ற பல்வேறு கருவிகள் மூலம் அறிவைப் பரப்புவதற்கு HARTI அதன் அதிநவீன ஆராய்ச்சியுடன் ஆராய்ச்சி நிபுணத்துவத்துடன் தயாராகவுள்ளது.

இந்தப் பின்னணியில், நிறுவகத்தின் இலக்குகளை அதாவது பொதுவாக சமூக-பொருளாதார இலக்குகளை அடைய, பயிற்சி, கல்வி, தரவு மற்றும் தகவல் தொடர்பு போன்ற பல்வேறு கருவிகள் மூலம் அறிவைப் பரப்புவதற்கு HARTI அதன் அதிநவீன ஆராய்ச்சியுடன் ஆராய்ச்சி நிபுணத்துவத்துடன் உதவுகிறதுவரவிருக்கும் ஆண்டு . மற்றும் அதற்கு அப்பால் அதிக உற்பத்தி மற்றும் திறமையான ஆராய்ச்சி மற்றும் .பயிற்சி அமைப்பு

# ஆராய்ச்சிப் பிரிவின் கலைவர்கள்



பணிப்பாளர் திரு. மாலிந்த செனவிரத்ன, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் உயர் தர ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்.

# ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

## இறுதிக் கணக்குகள் 2021

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**
**31 டிசம்பர் 2021இல் உள்ளவாறு நிதி நிலையின் கூற்று**

ரூபா

| **சொத்துக்கள்** | **குறிப்புகள்** | **2021** | **2020** |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள் | 2 | 13,984,557 | 9,743,479 |
| கிடைக்க வேண்டியவை - கடன்தருனர்கள் | 3 | 34,310,368 | 28,791,749 |
| கிடைக்க வேண்டியவை - வைப்புக்கள் | 4 | 613,070 | 613,070 |
| பொருட்பட்டியல்கள் | 5 | 6,540,513 | 5,355,832 |
| முன்கொடுப்பனவுகள் | 6 | - | 23,780 |
| வேறு நடைமுறையிலான சொத்துக்கள் | 7 | 544,768 | 144,809 |
| | | **55,993,275** | **44,672,718** |
| **நடைமுறைசாராச் சொத்துக்கள்** | | | |
| வேறு நிதிசார் சொத்துக்கள் | 8 | 4,294,283 | 4,125,453 |
| உட்கட்டமைப்பு, பொறி மற்றும் சாதனங்கள் | 9 | 15,062,278 | 19,063,948 |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 10 | 35,479,441 | 36,782,585 |
| | | **54,836,002** | **59,971,987** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **110,829,277** | **104,644,705** |
| **பொறுப்புகள்**<br>**நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கொடுப்பனவுக்குரியவை | 11 | **19,681,654** | **17,207,081** |
| | | **19,681,654** | **17,207,081** |
| **நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் நன்மைகள் | 12 | 61,196,120 | 67,426,150 |
| | | **61,196,120** | **67,426,150** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **80,877,774** | **84,633,231** |
| **நிகர சொத்துக்கள்** | | **29,951,503** | **20,011,474** |
| **நிகர சொத்துக்கள் / ஒப்பரவு** | | | |
| அரசாங்க உதவுதொகை – மூலதனம் | 13 | 34,582,108 | 39,140,540 |
| அமைச்சினால் பங்களிக்கப்பட்ட மூலதனம் | | | |
| ஒதுக்குகள் | 14 | 3,376,907 | 3,376,907 |
| மீள்மதிப்பு- ஒதுக்கு | | 26,450 | 26,450 |
| ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதியம் | 15 | 8,611 | 8,611 |
| திரண்ட மேன்மிகை / (பற்றாக்குறைகள்) | 16 | (8,042,573) | (22,541,035) |
| | | | |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ ஒப்புரவு** | | **29,951,503** | **20,011,474** |

5 முதல் 8 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 9 முதல் 16 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும். அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் தேவைப்பாடுகள்

அனுசரிக்கப்பட்டு, நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
துஷாரி வெதகே
கணக்காளர்

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
மாலிந்த செனிவிரத்ன
பணிப்பாளர்

திகதி : 25.02.2022

இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் வழங்குவதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கைகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்டது.

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
டி.எம்.எல்.பண்டாரநாயக்க
தலைவர்

(ஒப்பமிடப்பட்டுள்ளது)
எ.எச்.எம்.எல்.அபேரத்ன
சபை உறுப்பினர்

## ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
## 31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று

இ.ரூ.

| **வருமானம்** | **குறிப்புகள்** | **2021** | **2020** |
|---|---|---|---|
| | | | |
| அரசாங்க திறைசேரியிலிருந்து கிடைத்த நிதியங்கள் | | 181,409,088 | 154,739,750 |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்கு வெளித் தரப்புகளிடமிருந்து கிடைத்த நிதியங்கள் | | 4,955,348 | 5,161,942 |
| ஆராய்ச்சி, பயிற்சி செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன மானியம் | | 7,692,746 | 500,000 |
| ஏனைய வருமானம் | 17 | 17,972,548 | 19,863,438 |
| ஏற்பாட்டின் மேலான கிடைக்காத கடன் | | | 529,892 |
| **மொத்த வருமானம்** | | **212,029,730** | **180,795,022** |
| **செலவுகள்** | | | |
| வேதனாதிகள், சம்பளங்கள், ஊழியர் நன்மைகள் | 18 | (153,328,140) | (160,080,868) |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகள் | | (7,692,746) | (1,519,380) |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு வெளித் தரப்புகளிடமிருந்து கிடைத்த நிதிகள் | | (4,955,348) | (5,161,942) |
| தேய்மானம் | 9, 10 | (5,565,686) | (5,830,615) |
| ஏனைய செலவுகள் | 19 | (28,312,644) | (24,192,865) |
| ஏற்பாட்டின் கீழ் கிடைக்காத கடன் | | (2,750) | (148,288) |
| வங்கிக் கட்டணங்கள் | | (38,815) | (62,260) |
| **மொத்தச் செலவுகள்** | | **(199,896,129)** | **(196,996,218)** |
| **காலத்திற்கான மேன்மிகை /பற்றாக்குறை** | | **12,133,601** | **(16,201,196)** |

................................................... ................................................

கணக்காளர் பணிப்பாளர்

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்**

**31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று**

| 2020 | - | குறிப்புகள் | 2021 | |
|---|---|---|---|---|
| | **இயக்கச் செயற்பாடுகளில் பயன்பட்ட காசுப் பாய்ச்சல்** | | | |
| (16,201,196) | குறித்த ஆண்டிற்கான தேறிய பற்றாக்குறை/மிகை | | | 12,133,601 |
| | **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்** | | | |
| 5,830,615 | தேய்மானம் | | 5,565,686 | |
| (5,830,615) | கடன்தீர்ப்பு | | (5,565,686) | |
| 10,912,233 | பணிக்கொடைக்கான நிதியேற்பாடு | | 5,108,663 | |
| (1,175,853) | முதலீட்டு வருமானம் | | (1,382,793) | |
| (1,080,596) | முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 2,364,861 | |
| 18,420 | FA விடயங்களின் ஒழித்தல் மீதான இலாபம்/நஷ்டம் | | - | |
| (12,050) | கழிவு விடயங்களின் ஒழித்தல் மீதான இலாபம்/நஷ்டம் | | (27,062) | |
| | கிடைக்காத கடனுக்கான ஏற்பாடு | | | 6,063,669 |
| **(7,539,042)** | | | | **18,197,270** |
| | | | | |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | |
| 3,728,996 | வருமதிகள் | | (5,518,619) | |
| (126,577) | பொருட்பதிவேடுகள் | | (1,184,681) | |
| 11,287 | முற்கொடுப்பனவுகள் | | 23,780 | |
| (121,309) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | (399,959) | |
| (1,736,135) | கொடுமதிகள் | | 2,474,572 | (4,604,907) |
| **(5,782,779)** | **இயக்கச்செயற்பாடுகளில் பயன்பட்ட காசு** | | | **13,592,363** |
| | | | | |
| **(1,048,835)** | **பணிக்கொடைக் கொடுப்பனவு** | | | (11,338,693) |
| **(6,831,614)** | **இயக்கச்செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | | | |
| | | | | **2,253,670** |
| | | | | |
| | **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்** | | | |
| - | கிடைக்கவேண்டிவை | | | |
| (224,530) | வேறு நிதிசார் சொத்துக்கள் | | (168,830) | |
| (7,200) | உட்கட்டமைப்பு, பொறி மற்றும் சாதனங்கள் | | (263,398) | |
| - | காணி மற்றும் கட்டிடங்கள் | | - | |
| - | பெல்வெஹர சுற்று விடுதி | | - | |
| 1,175,853 | முதலீட்டு வருமானம் | | 1,382,793 | |
| - | நடந்து கொண்டிருக்கும் வேலை | | | |
| 2,737 | தொலைந்த நூல்களுக்கு நூலக நூல் ஆகுசெலவு அறவிடல் | | 2,527 | |
| **946,860** | **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நிகர பணம்** | | | **953,092** |
| | | | | |
| | | | | |
| | **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| 500,000 | அரசாங்க மானியம் - கிடைத்த மூலதனம் | | 8,700,000 | |
| (500,000) | ஆராய்ச்சி மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன மானியம் | | (7,692,746) | |
| - | திறைசேரிக்கான நிலையான வைப்புப் பெறுமான மாற்றல் | | - | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12,050 | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு -40% | | 27,062 | |
| - | அகற்றிய பொருட்களின் விற்பனை | | - | |
| - | ஊக்குவிப்பு நிதி - நிறுவகத்தின் பங்கு -10% | | | |
| | கிடைக்காத கடனுக்கான ஏற்பாடு | | | |
| **12,050** | **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு** | | | **1,034,316** |
| | | | | |
| (5,872,705) | **காசும் காசுக்கு சமனானவைகளிலும் உள்ள தேறிய அதிகரிப்பு** | | | 4,241,078 |
| 15,616,183 | **குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்கு சமனானவைகளும்** | | | 9,743,479 |
| **9,743,479** | **குறித்த ஆண்டு இறுதியிலுள்ள காசும் காசுக்கு சமனானவைகளும்** | | | **13,984,557** |
| | **குறிப்புகள்:** | | | |
| | **காசும் காசுக்கு சமனானவைகளும்** | | **1** | **11** |
| | | | **01.01.2021** | **31.12.2021** |
| 9,723,479 | வங்கியிலுள்ள காசு | | 9,723,479 | 13,916,913 |
| 20,000 | கையிலுள்ள காசு | | 20,000 | 67,644 |
| **9,743,479** | **மொத்தம்** | | **9,743,479** | **13,984,557** |

**ஹெக்டெர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி,**
**பயிற்சி நிறுவகம்**

**31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களிலும்/ஒப்புரவிலும்**

ரூபா

| | அரசாங்க மானிய மூலதனம் | ஒதுக்கங்கள் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ஊக்குவிப்பு மற்றும் பயிற்சி நிதியம் | திரண்ட மேன்மிகைகள் /(பற்றாக் குறைகள்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 01 ஜனவரி 2021இல் உள்ளவாறு மீதி | 39,140,540 | 3,376,907 | 26,450 | 8,611 | (22,541,035) | 20,011,474 |
| திறைசேரியிலிருந்து கிடைத்த நிதிகள் | 8,700,000 | | | | | 8,700,000 |
| ஆண்டிற்கான கடன்தீர்ப்பு | (5,565,686) | | | | | (5,565,686) |
| ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட மூலதன மானியம் | (7,692,746) | | | | | (7,692,746) |
| முன்னைய ஆண்டு மீதி கைமாற்றம் | | | | | | |
| முன்னைய ஆண்டுச் சீராக்கல்கள் | | | | | 2,364,861 | 2,364,861 |
| வருமானம் மற்றும் செலவினம் | | | | | 12,133,601 | 12,133,601 |
| 31 டிசம்பர் 2021இல் உள்ளவாறு மீதி | **34,582,108** | **3,376,907** | **26,450** | **8,611** | **(8,042,573)** | **29,951,503** |

**31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**1. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 பொது**

நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (இ.ப.க.நி.) விதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் (இ.அ.து.க.நி.) மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களில், பண வீக்கக் காரணிகளுக்கு சீராக்கல்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கணக்கீட்டுக் கொள்கைகள் அட்டுறு அடிப்படையில் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**1.2 ஒத்தீட்டுத் தகவல்**

கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட இந்த கணக்கீட்டுக் கொள்கைகளுடன் சேர்த்து நிறுவகத்தினால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன. நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்தை உறுதிசெய்துகொள்ளும் நிமித்தம், தேவையான போது, முன்னைய ஆண்டின் புள்ளிவிபரங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**1.3 ஐந்தொகைக் கணக்குத் திகதிற்கு பின்னர் எழும் சம்பவங்கள்**

ஐந்தொகைக் கணக்குத் திகதிற்கு எழுந்த சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற்கொள்ளப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செயப்பட்டுள்ளன.

**1.4 சொத்துக்களின் மதிப்பீடு**

**(i) ஆதனம், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்**

சொத்துக்களின் கொள்வனவு ஆகுசெலவு அல்லது நிர்மாண ஆகுசெலவு அடங்கலாக அவற்றின் மீதான ஏதாவது இடைநேர் செலவுகள் என்பன சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஆகுசெலவுகளாகும். நிறுவகம் தொடர்பில் மேற்கொள்ளும் வழிகளின் வாயிலாக நிலையான ஒரு தன்மையில் சொத்துக்களைச் சுவீகரிக்கும், சொத்துக்களை விஸ்தரிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது நிறுவகத்தின் ஆற்றலை அதிகரிக்கும் நிமித்தம் சொத்துக்களைச் சுவீகரிக்கும், சொத்துக்களை விஸ்தரிக்கும் அல்லது மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாக கருதப்பட்டுள்ளது. பராமரிப்பினதும் மற்றும் பழுதுபார்ப்புகளினதும் ஆகுசெலவுகள் ஏற்பட்ட ஆகுசெலவுகளாக கருதப்பட்டுள்ளன. சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன கீழே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற குறைந்த திரண்ட தேய்மான ஆகுசெலவில் (அல்லது மதிப்பீட்டில்) பதிவு செய்யப்பட்டுள்ளன.

அ) ஆண்டொன்றுக்கு பின்வரும் வீதங்களில், நேர்நிரல் முறையியல் பிரயோகிக்கப்பட்டு தேய்மானத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | ஆண்டொன்றுக்கு 2 ½% |

| | |
|---|---|
| உபகரணங்கள்/தளபாடங்கள் | ஆண்டொன்றுக்கு 10% |
| கணனிகள் | ஆண்டொன்றுக்கு 20% |
| நலன்புரி உபகரணங்கள் | ஆண்டொன்றுக்கு 10% |
| புத்தகங்கள் | ஆண்டொன்றுக்கு 10% |
| வாகனங்கள் | ஆண்டொன்றுக்கு 20% |

ஒரு முழுமையான ஆண்டின் தேய்மானம் கொள்வனவு ஆண்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆ) இ.க.மு. 20இன் ஏனைய முறை மீது பெறுமதி பதிவழிப்புத் தொகை அடையாளங்காணப்பட்டு, கணக்கிடப்பட்டது.

### இ) பெல்வெஹெர விடுதிக் கட்டிடம்

பெல்வெஹெர விடுதி 01.11.2019இன் படி தம்புள்ளை பிரதேச செயலக அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது என்பதுடன், அதன் பரிமாற்ற மதிப்பு ரூபாய் 1,962545.66 ஆகும்.

## 1.5 கடன்தருனர்கள்

### i) புலமைப்பரிசில் கடன்தருனர்கள்

தற்பொழுது ஆறு புலமைப்பரிசில் கடன் மீதிகள் தொடர்கின்றன. SLIPSAS 08 என்ற நியமத்திற்கு இணங்க, இடர் மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களின் பேரில், இந்த ஆண்டில், போதியளவு நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ii) ஏனைய கடன்தருனர்கள்

ஏனைய கடன்கள் அவை மாறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அளவுகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு போதியளவு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

1. 05 ஆண்டுகளுக்கு மேலான கடன்தருனர்கள் மீதி - 100%
2. 01 முதல் 05 ஆண்டுகள் வரையிலான கடன்தருனர்கள் மீதி - 5%

### III) பதிவு செய்யப்படாத விடுதி வருமானம்

பதிவு செய்யப்படாத விடுதி வருமானம் ரூ. 8,895,470/-என்பதுடன், அந்தத் தொகை 2015 மே முதல் 2018 ஜூலை வரை விடுதி செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காக உருவாக்கப்பட்டது. ஹெ.க.ஆ.ப.நி. பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் இந்தத் தொகை கண்டறியப்பட்டது. இந்தத் தொகை ஆளுநர் குழுவால் எடுக்கப்பட்ட முடிவு என்று பதிவு செய்யப்படவில்லை.

### IV) தம்புள்ளை பிரதேச செயலகத்திலிருந்து பெறத்தக்கவை

இந்த தொகை பல்வெஹெரா விடுதியின் பரிமாற்ற மதிப்புடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த பரிமாற்ற மதிப்பு மீதித் தொகை விடுதியின் வருமதியான வாடகைத் தொகையில் இணக்கப்படவில்லை.

### 1.6 பொருள் இருப்புக்கள்

நுகர்வுப் பொருட்களின் இருப்புக்கள் ஆகுசெலவில் மதிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய இருப்புக்கள் குறைந்த ஆகுசெலவில் அல்லது தேறிய மாறக்கூடிய பெறுமானத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. இருப்புகளின் ஆகுசெலவு FIFO முறையியலைப் பிரயோகித்து மதிப்பிடப்பட்டுள்ளது.

### 1.7 முதலீடு

நிலையான சொத்துக்கள் வைப்புக்கள் அதே வங்கிகளில் மீண்டும் வைப்புச்செய்யப்பட்டிருந்தன.

### 1.8 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடு

#### 1.8.1 பணிக்கொடை

1983இன் 12ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம், செலுத்த வேண்டிய பணிக்கொடைக்கான நிதியேற்பாடு நிதிக்கூற்றக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ஆகியவற்றின் அடிப்படையில், 2021ஆம் ஆண்டில், பணிக்கொடை கணிப்பிடப்பட்டுள்ளது.

#### 1.8.2 இடைநேர் பொறுப்புக்கள்

நீதிமன்றத்தினது நிறைவு பெறாத தீர்ப்பின் அடிப்படையில், இடைநேர் பொறுப்புக்களுக்கான ஒரு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 1.8.3 இடைநேர் சொத்துக்கள்

புலமைப்பரிசில் கடன்களை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட நிறைவு பெறாத சட்ட வழக்கின் அடிப்படையில், இடைநேர் சொத்துக்களுக்கான நிதியேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு.பி.டி.ஜே.ஆனந்த**
